பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
# The EELA NADU

மலர்: 19 வைகாசி 11 ஜ: ஆகிர்: 5 இதழ்: 102
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24-5-77

வட பகுதியில்

## எரிபொருள் தட்டுப்பாடு: பங்கீட்டு விநியோகம்

### 'சட்டப்படி வேலை' இயக்க எதிரொலி

யாழ்ப்பாணம், செவ் வடபகுதியில் நேற்றுமுதல் எரிபொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர் சட்டப்படி வேலை இயக்கத்தை தொடர்ந்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள சகல எரிபொருள் நிலையங்களும் விற்பனையை நிறுத்தியுள்ளன. பங்கீட்டு அடிப்படையில் இன்று எரிபொருள் வழங்க

(8-ம் பக்கம் பார்க்க)

துரையப்பா கொலை வழக்கு:

# கொழும்புக்கு உடன் மாற்றும் கோரிக்கை நிராகரிப்பு!

## விசாரணை மாற்றம் ஏற்பு; 27-ல் எதிரிகள் ஆஜராவர்

யாழ்ப்பாணம், செவ்

**துரையப்பா கொலைவழக்கு குற்றப்பத்திரம் தாக்கல்செய்த நிலையிலேயே கொழும்பு மேல்நீதிமன்றத்திற்கு உடன் மாற்றப்படவேண்டும் என்ற கோரிக்கை யாழ். நீதிமன்றத்தில் நேற்று நிராகரிக்கப்பட்டது.**

**வழக்கின் விசாரணையை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணைக்கு வந்த பின்னரே அம் மாற்றம் நடைமுறைக்கு வரும். விசாரணைக்கு போடப்படு முன் வழக்குசம்பந்தமான நடவடிக்கைகள் இந்த நீதிமன்றத்திலேயே எடுக்கப்படும்.**

துரையப்பா கொலைவழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவ்வழக்கை கொழும்பு மேல்நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு சட்டமா அதிபர் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுமீதான விவாதம் நேற்று நடைபெற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

துரையப்பா கொலைவழக்கில் பாலசுப்பிரமணியம் கலாபதி, விஞசித்தம்பி ஆறுமுகம், கிருபாகரன், சபாநாயகம் லோகநாதன், சந்திரசேகரம் சிறிதரன், தம்பிப்பிள்ளை சந்ததியார் ஆகிய 5 இளைஞர்கள் மீது கொலைக்குற்றமும் சதிக்குற்றமும் சுமத்தப்பட்டுள்ளது.

1ம், 2ம், 3ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். கதிரவேலுப்பிள்ளை, சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயா, சட்டத்தரணி கே. துரைரத்தினம், சட்டத்தரணி வி. யோகேஸ்வரன், சட்டத்தரணி கே. வி. எஸ். வரதராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 4ம், 5ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர் ஸ்ரீசிவாயா சட்டத்தரணி கனக மனோகரன், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

அரசதரப்பில் உதவிபகிரங்க வழக்கு தொடுநர் சட்டத்தரணி கெனத் செனிவரத்ன, அரசசட்டத்தரணி கே ஜெயக்குமாரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

சட்டத்தரணி எஸ். கதிரவேலுப்பிள்ளை நேற்று தமது ஆட்சேபத்தைத் தொடர்ந்து தெரிவித்தார்.

விசாரணை ஆரம்பமாகுமுன் வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்ற முடியாதென்றும் தற்போதுள்ள நிலையில் அதுசாத்தியமாகாதென்றும் அவர் கூறினர்.

சட்டப்படி இந்த நீதிமன்றத்தில் விசாரணை ஆரம்பிக்குமுன் இவ்வழக்கை மாற்ற முடியாதென்றும் கூறினர். விசாரணை ஆரம்பமாகுமுன் வழக்கை மாற்றுவதற்கு சட்டத்தில் இடமளிக்கப்படவில்லையென்றும் கூறினர்.

சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயா, தமது வாதத்தின்போது 4ம் எதிரியின் பெயர் சிங்களத்தில் ஸ்ரீதரனென்றும் தமிழில் லோகநாதனென்றும் ஆணையில் பிழையாக இருப்பதாகத் தெரிவித்து அதனை ஏற்க முடியாதென்றும் கூறினர். எதிரிகளை நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்தபின்னரே அவர்களின் பெயர் அடையாளம்பற்றி அறிந்து கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

உதவி பகிரங்க வழக்குத் தொடுநர் சட்டத்தரணி கெனத் செனிவரத்தின வழக்கைதாக்கல் செய்ததினத்திலிருந்தே அதனை மாற்றுவதற்கு அதிகாரமுண்டென்று வாதாடினர்.

## "காங்கேசன்துறையில் நான் போட்டியிடுவது ஏன்?"

### அமிர்தலிங்கம் விளக்கம்

மாவிட்டபுரம், திங்.

"தந்தை செல்வாவின் பாசறையில் 30 வருடகாலம் தொண்டனாக இயங்கி அவரால் வழிநடத்தப்பட்டாலும் அவரது இடத்தை நிரப்பக்கூடிய தகுதி எனக்கில்லை. ஒரு தனி மனிதனைமட்டுமல்ல [illegible] ராக விளங்கிய அவர் சுதந்திரம் என்றவிதையை இட்டுச் சென்றுள்ளார். அவரதுதகுதி எமக்கில்லாவிட்டாலும் எம்மால் முடிந்தவரை அவரது பாதையில்சென்று தமிழ் ஈழ இலட்சியத்தைஅடையப் பாடுபடுவோம்".

இவ்வாறு கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவிலுக்கருகாமையில் நடந்த தந்தை செல்வாவின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழர் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர்.

திரு. த. சரவணபவன் தலைமையில் நடந்தஇக்கூட்டத்தில் அவர் மேலும் [illegible]

முதன்முதலாக மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் மண்டபத்தில், தமிழரசுக்கட்சி ஆரம்பமானவேளை மாணவனாக இருந்த எனக்கு அக்கூட்டத்தில் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்றிலிருந்து செல்வாவுடன்இணைந்துசெயல்பட்டுவந்தேன். எத்தனை

(8-ம் பக்கம் பார்க்க)

## கொள்ளை வழக்கு மனு நிராகரிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

இன்பத்தின் மீதான கொள்ளை வழக்கை கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு உடன் மாற்றவேண்டுமென்ற கோரிக்கை நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டது. விசாரணையை மாற்றவேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது

இவ் வழக்கில் இரு எதிரிகளையும் இம் மாதம் 27-ம் திகதி கோர்ட்டில் ஆஜர்செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

இழ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கை கொழும்பு மேல்நீதிமன்றத்திற்கு மாற்றும்படி அரச சட்டத்தரணி திரு. க. ஜெயக்குமார் மனு ஒன்றைத் தாக்கல்செய்தார்.

இவ் வழக்கில் துரைசிங்கம் பரமேஸ்வரன், கனகரத்தினம் விஸ்வசோதி ரத்தினம் (இன்பம்) ஆகியோர் 1975 ஆகஸ்ட் 14-ந் திகதி வங்கி மனேஜரிடம் கொள்ளையடித்ததாகவும், கார் ஒன்றை கொள்ளையடித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

நீதிபதி மனுவை நிராகரித்து எதிரிகள் இருவரையும் இம்மாதம் 27-ம் திகதி ஆஜர்செய்யுமாறு உத்தரவிட்டார். (க)

## வேட்பாளர் அறிவிப்பு

(நல்லூர்த் தொகுதி)

### கந்தையா இராமநாதன்

அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் கொள்கையை முன்வைத்து தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்கு நீண்டகாலம் உழைத்த கொக்குவில் கோண்டாவிலைச் சேர்ந்த நான் எதிர்வரும் பொதுத்தேர்தலில் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நல்லூர்த் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றேன் என்பதைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். அரசாங்கத்தில் நான் தொழில் நுட்ப அதிகாரியாகப் பணியாற்றியபோதும் சமூகத்திற்கு நான் ஆற்றிய பணியை மக்கள் அறிவர்.

க. இராமநாதன்,
சமாதான நீதவான்.

செல்வஸ்தான்,
பலாலி வீதி,
கோண்டாவில்.

6267

### தேர்தல் பிரசாரத்தை சூரியர் ஆரம்பித்தார்

கிளிநொச்சி, திங்கள்

அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தமது தேர்தல் பிரசாரவேலைகளை இங்கு ஆரம்பித்தார்.

பளை, வட்டக்கச்சி, பூநகரி போன்ற இடங்களில் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் தமது தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டார். (அ)

## சாவகச்சேரி தொகுதி

தேர்தல்பற்றிய ஆலோசனைக் கூட்டமொன்று இன்று பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரியில் 'சரஸ்வதி பூங்கா' என்ற எனது இல்லத்தில் நடைபெறும். ஆதரவாளர்களை அன்புடன் அழைக்கின்றேன்.

வே. குமாரசுவாமி

6268

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வசாவிளான் தெற்கு திடற் புலம் என்னும் இடத்தில் மாரத்தவத்தையும், தோமன் டுவையும் - இரண்டு துண்டு களாக 16 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். க. செல்வராசா, C/o வே. மார்க் கண்டு, "கதிரை" நாச்சிமார் கோவில் பின்வீதி, புன்னாலைக் கட்டுவன் வடக்கு, புன்னாலைக் கட்டுவன். 6259

### தேவை

அனுபவம் வாய்ந்த பாண் தயாரிப்பாளர்-தரம் ஏ, பாண் தயாரிப்பாளர்-தரம் பி, பாண் தயாரிப்பாளர்-தரம் சி. அனுபவச் சான்றிதழ்களுடன் தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை" என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 6264

சகலவிதமான மோட்டார் (Motor) வைன்டிங்கில் ஐந்து வருட அனுபவமும், வாட்டர் பம்புகள் பழுதுபார்க்கக்கூடிய வராகவும், நற்குணங்கள் உள்ள ஒருவர் தேவை. சம்பள விபரம் நேரில் பேசலாம். நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். நியூ ரோன் எலெக்றிக்கல்ஸ், 141, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6257

### கல்வி

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று ஆங்கில இலக்கணம், இலக்கியம், பொது அறிவு, ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்பித்துக் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 6212, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6212

### வகுப்புகள்

வெல்டிங் (Electric & Gas மூன்று மாதம், இலெக்றிக் வயறிங் மூன்று மாதம், ரேடியோ ஆறு மாதம் காலை, பிற்பகல், மாலை நேர வகுப்புகள் எமது N.I.E.T. டிப்ளோமா பெற்று வெளிநாடுகளில் ஏராளமானோர் வேலை பார்க்கிறார்கள். National Institute of Engineering Technology மைற்மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6210

### காணவில்லை

20-5-77 வெள்ளிக்கிழமை யாழ். ஆஸ்பத்திரிக்கும் - பஸ் நிலையத்திற்குமிடையில் கண்ணாடி, சீசன்ரிக்கட், திறப்புக் கோர்வை உட்பட முக்கிய தஸ்தாவேஜுகளுடன் எனது பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். திருமதி வி. தெய்வநாயகி, பிரசவ சிகிச்சை நிலையம், அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம். 6266

## கொழும்பு மத்தியில் அலவி மௌலானா

கொழும்பு, திங்கள்

கொழும்பு மத்திய தொகுதியில், ஸ்ரீ ல. சு. கட்சியின் அபேட்சகராக ஜனாப் அலவி மௌலானா போட்டியிடுவார்.

இவர் சுதந்திரக்கட்சி கட்டுப்பாட்டிலுள்ள அகில இலங்கை சுதந்திரதொழிற் சங்க சம்மேளனத்தின் காரியதரிசி ஆவார். (கெ-இ)

## கேள்வி அறிவித்தல்

### இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம்

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்திற்குத் தேவையான தளபாடங்களை வழங்குவதற்கு பிரதிப் பொருளாளரினால் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மீளப்பெறத்தக்க கேள்வி வைப்பாக ரூபா 250/-ஐயும், மீளப்பெற முடியாத பணம் ரூபா 50/-ஐயும் செலுத்தி மேலதிகப் பதிவாளரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய இக்கேள்விகள் சம்பந்தப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை 31-05-1977 பகல் 12-00 மணிக்கு முன்னதாக அனுப்பவும்.

மேலதிகப்பதிவாளர்.
யாழ்ப்பாண வளாகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1977-05-19. 6262

### பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)

### பருத்தித்துறை

## கேள்விப் பத்திரம்

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தில் சுமார் 6000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு உண்டு. கேள்விப்பத்திரத்தை வைப்புப்பணமாக ரூபா 50/ஐயும், கேள்விப் பத்திரத்திற்கு ரூபா 2/-ஐயும் கட்டி, இக்கந்தோர் நேரத்தில் பொது முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் பெறும் கடைசித்திகதி 7-6-77. கேள்விபபத்திரம் 7-6-77க்குப் பிந்தாமல் "பொதுமுகாமையாளர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பப்படும் தபாலுறையின் மேற்பக்க இடதுமூலையில் "வெற்றுச்சாக்குக்கான கேள்விப் பத்திரம்" என எழுதப்படல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
31-5-77
6265

மலேஷியன் கைமார்க் சாம்பிராணி

கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்
கொழும்பு-10
போன்: 24261—5

## ஆயுர்வேத மருத்துமூலிகை கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செவ்

வடபகுதியில் தொழில்புரியும் ஆயுர்வேத மருத்துவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தேவைப்படும் மூலிகைகளை வடபகுதியிலேயே உற்பத்தி செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமான கருத்தரங்கொன்று இம்மாதம் 28ம் திகதி கிளிநொச்சி - காணி அபிவிருத்தி செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கின் நிகழ்ச்சிகள் யாழ் அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா தலைமையில் காலையிலும் மாலையிலும் நடைபெறும்.

ஆயுர்வேத மருந்து மூலிகைகளை சேகரிப்பதும், பதப்படுத்துவதும், சேமிப்பதும் உற்பத்திக்குத் தேவைப்படும் நிலங்களை பெறுவது சேகரித்தமூலிகைகளை விநியோகிப்பது விற்பது பற்றியும் இக்கருத்தரங்கில் கலந்தாலோசிக்கப்படும்.

இக்கருத்தரங்கில் ஆயுர்வேத ஆணையாளர் சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி, கொழும்புத்திட்டத்தின்கீழ் இங்கு வந்துள்ள இந்திய நிபுணர்கள் 'சுபேதேத்' வாரசஞ்சிகை ஆசிரியர் ஆயுர்வேத மருந்துக்கூட்டுத்தாபன விற்பனை கொள்வனவு அதிகாரி, நாவின்ன ஆயுர்வேத ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ஆகியோர் கலந்துகொள்வார்கள் இக்கருத்தரங்கு ஒழுங்குகளை கிளிநொச்சி சித்த ஆயுள்வேத சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (கா-இ)

## இசை ஆசிரியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், செவ்

வடபிராந்தியக் கல்வித் திணைக்களம் நடன, சங்கித ஆசிரியர்களுக்கான நியமனங்களை நேற்று வழங்கினர். 12 சங்கித ஆசிரியர்களும் 3 நடனஆசிரியர்களும் ஒரு சித்திர ஆசிரியரும் நேற்று நியமனம் பெற்றனர். (கெ-அ)

## லக்ஸ்பிறே விநியோகத்தில் ஊழல்

பண்டத்தரிப்பு, திங்கள்

லக்ஸ்பிறே பால்மா விநியோகத்தில் முறையின்மாக நடந்துகொண்ட கிளைச் சங்கமொன்றின் முகாமையாளரும் ஊழியர்களும் தலைமைச் சங்கத்தின் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டவர்கள்.

இதுபற்றி கூறப்படுவதாவது:

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் அதன் கிளைச் சங்கம் ஒன்றிக்கு அண்மையில் 35 லக்ஸ்பிறே பால்மா ரின்கள் வழங்கப்பட்டதாம். இந்த லக்ஸ்பிறே பால்மா விநியோகம்பற்றி பாவனையாளருக்கு எவ்வித அறிவித்தலும் கொடுக்கப்படாது உடனடியாகவே வேண்டியவர்களுக்கு விற்கப்பட்டதாம். இதுபற்றி அறிந்து குழந்தைக் கூப்பனுடன் சென்றவர்களுக்கு "லக்ஸ்பிறே இன்னும் வரவில்லை" என்று கூறப்பட்டதாம்.

இதையிட்டு பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு உடனடியாக முறையிடப்பட்டது. விசாரணை நடத்திய சங்க அதிகாரிகள் மேற்படி கிளைச் சங்க முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் மீது உடனடியாக கடும் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிய வருகிறது. (இ)

# சேக்கிழார் விழா இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செவ்.

சேக்கிழார்விழா 2-ம் நாளான இன்றைய நிகழ்ச்சிகள் திரு சி. விசுவலிங்கம் தலைமையில் நடைபெறுகின்றன.

இன்றைய நிகழ்ச்சிகளில் திரு. எம். எஸ். ஸ்ரீதயாளன் தலைமையில் "திருமணம் கண்ட செம்மல்கள்" என்னும் தலைப்பில் மாணவர் அரங்கும் இடம்பெறும். சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி "வீடும் வேண்டா விறல்" என்ற தலைப்பில் பேருரை நிகழ்த்துவார். அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. செ. வைத்திலிங்கத்தின் சிறப்புரையும், திருமறை ஓதல், பரிசு வழங்கல் நிகழ்ச்சியும் இடம் பெறும்.

இவ்விழா யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று ஆரம்பமாகி நடைபெறுவது தெரிந்ததே. (கெ-அ)

## போதிய விதைகள் இல்லையாம்

சங்கானை, திங்கள்

வடபகுதியில் அண்மையில் பெய்த மழையினால் பாதிக்கப்பட்ட வலி-மேற்கு விவசாயிகள் மாற்றுப்பயிர் செய்யுமுகமாக பம்பாய் வெங்காயம், பீற்றூட் ஆகிய உப உணவுப் பயிர்ச்செய்கையில் அதிக அக்கறை கொண்டுள்ளனர்.

இதனால் இப்பகுதிக்கு விவசாய விரிவாக்க நிலையத்தினரால் விவசாய விரிவாக்க பெருக்கக் குழுவிற்கு வரவழைக்கப்பட்ட பம்பாய் வெங்காயம், பீற்றூட் போன்ற விதைகள் தமக்கு போதிய அளவில் பெற்றுக் கொள்ள முடியவில்லை என இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதுபற்றி இப்பகுதி விவசாய போதனாசிரியர் திரு. எஸ். சிவபாதத்திடம் கேட்டபோது இப்பகுதியில் உள்ள சகல விவசாயிகளுக்கும் இவ் விதைகள் சமஅளவில் பகிர்ந்தளிக்கப்படும் என்றார். (இ)

## பருத்தித்துறையில் இன்று அஞ்சலி

நெல்லியடி, செவ்வாய்

மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவையொட்டி இன்று செவ்வாய்க் கிழமை மாலை பருத்தித்துறை கடற்கரைமைதானத்தில் அஞ்சலிக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி ம. வேலும் மயிலும் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கூட்டணிப் பிரமுகர்கள் பலர் உரையாற்றுவார்கள். (அ)

# செயல்திட்டப் படம் காட்டினர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைச் சேர்ந்த எச். எஸ். சி. மாணவர்கள் தங்கள் செயற்றிட்ட ஆசிரியர் திரு. ஆ. சி. குணசிங்கராஜா தலைமையில் இலந்தைக்காடு என்ற கிராமத்தில் இரண்டாவது முறையாக சுகாதாரம் சம்பந்தமான படக்காட்சி ஒன்றினை அவ்வூர் மக்களுக்கு காட்டினர். இத்திரைப்பட நிகழ்ச்சி கடந்த வெள்ளிக்கிழமை இலந்தைக்காடு காளி கோவிலில் முன்றலில் சுகாதாரப்பகுதியினரின் உதவியுடன் நடைபெற்றது.

சருமநோய்களான சொறி, சிரங்கு, குஷ்டம் ஆகியவை பற்றிய படக்காட்சியே இடம் பெற்றது. இக்கல்லூரி மாணவர்களின் செயற்றிட்டம் சரும நோய் சம்பந்தமானதாகும். தங்கள் செயற்றிட்டத்தின் நோக்கத்தினைச் செயற்படுத்துவதற்கு இக்கல்லூரி மாணவர்கள் வாரத்தில் இரு தினங்கள் இலந்தைக்காடு செல்வதுண்டு. சூழற்சுத்தத்தின் முக்கியத்துவத்தினைக் கிராமவாசிகளின் மத்தியில் இவர்கள் அடிக்கடி அறிவுரை கூறிவருகின்றனர். மலசலகூடங்களைப் புதிதாகக் கட்டிக் கொடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இக்கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் ஈடுபட்டு வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

படக்காட்சி ஆரம்பமாவதற்கு முன்பாக ஆசிரியர் திரு. ஆ. சி. குணசிங்கராஜா தமது தலைமையுரையில் கூறுகையில், தன் மாணவர்கள் இளஞ்சிறார்களாயினும் சமுதாயத்தை உணர்ந்து அதற்கேற்ப ஒட்டி உறவாடும் பக்குவ நிலையை அடைந்திருப்பதைக் காணும்போதுதான் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார். இச்செயற்றிட்டத்தின் நோக்கம் தனித்தியங்கிய பாடசாலையைச் சமூகத்திற்குள் எடுத்துச் செல்வதாகும் என்றும் அவர் சொன்னார்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்கள் தங்கள் செயற்றிட்டம் சம்பந்தமாக அங்கு நாடகம் ஒன்றினையும் நடாத்திக்காட்ட இருக்கின்றனர், என்றும் அவர் கூறினார்' தலைவர்களில் ஒருவரான செல்வன். சி. மனோகரன் நன்றிகூறினார், (அ)

## விற்பனை நிலையங்கள்

பண்டத்தரிப்பு, திங்கள்

பண்டத்தரிப்பில் புதிதாக நிறுவப்பட்டுள்ள நவீனசந்தையில் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம் மேல்நாட்டு மருந்து விற்பனைநிலையம், மரக்கறி விற்பனைநிலையம், மின்சார உதிரிப்பாகங்களுக்கான விற்பனைநிலையம் ஆகிய மூன்று விற்பனைநிலையங்களை அடுத்தமாத முற்பகுதியில் திறக்கவுள்ளது. (இ)

## காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

வேலணை இந்து இளைஞர் மன்ற கட்டடத்துக்கான காணியை வேலணை முடிக்குரிய பிள்ளையார் கோவிலுக்குமுன் வேலணை நடராசா வித்தியாசாலை ஸ்தாபகர் அமரர் செ. கனகசபாபதியின் ஞாபகார்த்தமாக, அவரது சந்ததியினர், வழங்கியுள்ளனர். [கெ-அ]

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம்

## சீனு, ரஷ்யாவுடன் உறவைப் பலப்படுத்த அமெரிக்க அதிபர் திட்டம்

வாஷிங்டன், மே 23

**ரஷ்யா, சீனு ஆகிய நாடுகளுடனுன அமெரிக்க உறவை வலுப்படுத்தும் நோக்குடன் புதிய வெளிநாட்டுக் கொள்கைகளை அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டர் அறிவித்துள்ளார்.**

அமெரிக்க இன்டியானு பல்கலைக் கழகத்தில் உரையாற்றுகையிலேயே திரு. கார்ட்டர் தமது புதிய வெளிநாட்டுக் கொள்கைகளை அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய வெளிநாட்டுக்கொள்கைகள் ஜனநாயக அடிப்படையில் மனிதாபிமான முறைக்கமையவே இருக்கும் என்றும் புதிய கொள்கைகள் இரகசிய பேரங்களைவிடுத்து நீடித்து நிற்கும் சர்வதேச உறவை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என்றும் அவர் கூறினர்.

இப்புதிய வெளிநாட்டுக் கொள்கைகள் ரஷ்யா, சீனு ஆகிய நாடுகளுடன் நல்லுறவை வளர்க்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த திரு. கார்ட்டர் புதிய கொள்கையின்படி கம்யூனிஸத்தை தடுக்க குறைந்தளவு கவனமே செலுத்தப்படும் என்றும் தெரிவித்தார். [இ]

## ஜெயப்பிரகாஷ் வீடு திரும்பினர்

பம்பாய், மே, 23

அமெரிக்காவில் சத்திரசிகிச்சையை முடித்துக்கொண்டு இந்தியா திரும்பியபின் பம்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் நேற்று ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பியுள்ளார்.

தெற்கு பம்பாயிலுள்ள தமது இல்லத்தில் திரு. ஜெயப்பிரகாசர் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறுர்.

நேற்று ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்த மத்திய குடும்பக் கட்டுப்பாட்டு அமைச்சர் திரு. ராஜ் நாராயண் ஜெயப்பிரகாசரைச் சந்தித்து உரைநிகழ்த்தினர். (இ)

# டி. ஐ. ஜி. மீது கொலைக் குற்றம்

திருவனந்தபுரம், மே. 23

கேரள மாநிலத்தில் சிறையில் கொல்லப்பட்ட என்ஜினியரிங் கல்லூரி மாணவரான ராஜன் என்பவரின் விவகாரம் தொடர்பாக பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஜெயராம் படிக்கல் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

திருமதி இந்திராவின் ஆட்சியில் கைது செய்யப்பட்ட என்ஜினியரிங் கல்லூரிமாணவரான ராஜன் சிறையிலிருந்து காணுமற்போய்விட்டதாகவும் பின்னர் அம்மாணவர் கொலை செய்யப்பட்டதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக நான்கு பொலிசார் ஏற்கெனவே தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தனர். (இ)

## சித்திரவதை எதிர்ப்பு மகாநாடு

சென்னை, மே 23

இந்திய நெருக்கடி நிலையின் போது அரசியல் வாதிகள் சித்திரவதை செய்யப்பட்டது குறித்து பொதுமக்களின் கருத்தைத் திரட்டும் 'சித்திரவதை எதிர்ப்பு' மகாநாடு அடுத்த மாத இறுதியில் பெங்களூரில் நடைபெறுகிறது.

இதற்கான நடவடிக்கைகளை மத்திய அஞ்சல்துறை அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னுண்டஸின் சகோதரர்களான திருவாளர்கள் லோறன்ஸ் மைக்கல் ஆகிய இருவரும் கவனித்துவருகின்றனர். (கெ-இ)

# அமைதியான தேர்தலுக்கு ஒத்துழையுங்கள்

## கமிஷனர் சுவாமிநாதன் கோரிக்கை

கல்கத்தா, மே 23

எதிர்வரும் சட்டசபைத் தேர்தல்கள் சுயேச்சையாகவும், நியாயமான முறையிலும் நடைபெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தலைமைத் தேர்தல் கமிஷனர் திரு பி. சுவாமிநாதன் இன்று கல்கத்தாவில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

''அரசியல் கட்சிகள் மக்கள் வேட்பாளர்கள் ஆகியோர் தேர்தல் அமைதியாக நடைபெற ஒத்துழைக்கவேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சென்னை, பாண்டிச்சேரி, ஜெய்ப்பூர் முதலான மாநிலங்களுக்குத்தான் விஜயம் செய்ததாகவும் தேர்தல் குறித்து எவரும் தம்மிடம் புகார் எதுவும் கூறவில்லையென்றும் அவர் சொன்னர் (உ)

# மீண்டும் பாக் பொதுத்தேர்தல்?

## நிபந்தனையுடன் பூட்டோ இணக்கம்

இஸ்லாமாபாத், மே. 23

''எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிரான போராட்டங்களைக் கைவிட்டால் பொதுத்தேர்தல் மீண்டும் நடத்தப்படும்'' என்று பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பிகார் அலிபுட்டோ அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் நிலவிவரும் அரசியல் நெருக்கடியை தீர்க்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு திரு புட்டோ புதிய திட்டம் ஒன்றினையும் வகுத்துள்ளார். (உ.)

## 'மாருதி' ஊழியர் பிரதமர் சந்திப்பு

புதுடில்லி, மே 23

பெரும் பிரச்னைக்குள்ளாகியிருக்கும் திருமதி காந்தியின் புதல்வன் திரு. சஞ்சய்காந்தியின் மாருதி தொழில் நிறுவனத்தின் ஊழியர்கள் குழுவொன்று நேற்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயைச் சந்தித்தனர்.

பிரதமரிடம் தமது எதிர்காலம்பற்றி இக்கோஷ்டியினர் நீண்ட நேரமாகக் கலந்துரையாடினர். [இ]

## 2 கோடி வீராங்கனைகள்

மாஸ்கோ, மே 23

சோவியத் யூனியனில் இப்பொழுது 2 கோடி பெண்கள், விளையாட்டுக்களில் ஈடுபட்டிருக்கின்றனர். குடும்பப் பொறுப்புக்களையும் விளையாட்டுக்களையும் வெற்றிகரமாக இணைத்து, சில பெண்கள் விளையாட்டுத் துறையில் மிகஉயர்ந்தநிலையை அடைகின்றனர்.

உலக விளையாட்டு வரலாற்றில் ஒலிம்பிக் விளையாட்டு வீராங்கனைகளான வாரிசா லதினினு, நாதெஸ்தா சிஷோவா, லிதியா ஸ்கோப்லிகோவா, கலினு குலகோவா, ஓல்கா கோர்புத், கலினு கொர்கோவா, இரினு ரோத்னினு முதலிய பல பெயர்கள் நிலையான இடம்பெற்றுள்ளன. [இ]

## மத்திய அரசுக்கு அதிகாரமில்லை

பெங்களூர், மே 23

ஒரு மாநிலத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் அம்மாநில சட்டசபைக்கு மட்டுமே பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள் ஒரு அரசின் நடவடிக்கைப் பற்றித் தீர்ப்பளிக்கும் நீதிபதிகள் மக்கள் தான். எனவே மாநில அமைச்சர்கள் மீதான குற்றச் சாட்டுக்களை விசாரிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு இல்லை.

இவ்வாறு கர்நாடக முதல்வர் திரு. தேவராஜ். அவர்கள், மத்திய உள்துறை அமைச்சர் சரண்சிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார், (கெ-இ)

## தமிழ்நாட்டில்

# ஜனதா-233 தி.மு.230 எம்.ஜி.ஆர்-200 காங்-198

சென்னை, மே 23

தமிழ்நாட்டில் எதிர்வரும் சட்ட சபைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் 1390 பேர் போட்டியிடுகின்றனர்.

ஜனதா கட்சி—233, தி. மு. க.—230, அ.இ. அ தி.மு.க—200, காங்கிரஸ்—198 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றனர்.

ஜனதாகட்சியும், தி. மு. க. வும் தனித்தும், இந்திரா காங்கிரஸ் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடனும், அ. இ. அ. தி. மு. க. மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியுடனும் இணைந்து போட்டியிடுகின்றன

64 தொகுதிகளில் நான்கு முனைப்போட்டி 50 தொகுதிகளில் ஆறுமுனைப்போட்டியும் இருக்கும். (இ)

## இந்திய விஞ்ஞானிகளின்

# சந்திரக்கல்லை ஆராய்கிறுர்கள்

புதுடில்லி, மே. 23

சந்திரனிலிருந்து சோவியத் விண்கலத்தினுல் கொண்டு வரப்பட்ட பாறையின் சில பகுதிகளை இந்திய விஞ்ஞானிகள் குஜராத் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் ஆராய்ந்துவருகின்றனர்.

இது தொடர்பாக ஆய்வுக் குழுவின் முதல்வர் டாக்டர் நரேந்திரா தெரிவித்துள்ளதாவது:-

''சந்திரத்துறையில் மண் அரிப்பு, சந்திரத் தரையின் கதிரியக்கத்தின் பாதிப்பு முதலானவற்றை அறியும்பொருட்டே இந்த ஆய்வு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இதுவரை மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து கிடைக்கப்பெறும் பெறுபேறுகளின் பிரகாரம், ஒவ்வொரு 10 லட்சம் ஆண்டுகளிலும் சந்திரத் தரையின் 3 மில்லி மீட்டர் கனபரிமானமுள்ள பகுதி அரித்துச் செல்லப்படுகின்றது.

''சூரிய இயக்கம் குறைந்ததன் காரணமாக 20 லட்சம் ஆண்டுகளாக பூமி உறைபனியால் மூடப்பட்டிருந்தது என்ற சூத்திரத்தைச் சரிபார்ப்பதற்காகவே நாம் சந்திரத் தரையின்மீதான சூரிய இயக்கத்தின் பாதிப்பினை ஆராய்கின்றோம்.'' (இ)

# கூர்ங்கோபுரத்துடன் செல்வா நினைவாலயம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தந்தை செல்வாவின் நினைவாலயம் நீண்ட கூர்ங்கோபுரத்துடன் அமைக்கப்படவுள்ளது.

தமிழ்க் கலாச்சார முறைப்படி அமைக்கப்படஉள்ள இக்கோபுரத்திற்கான சிற்பவேலைகள் பற்றிய ஆலோசகர்களை தமிழக முன்னுள் முதல்வர் திரு.மு.கருணுநிதி வழங்குவார்.

செல்வாவின் அஸ்தி அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் முக்கோணவடிவிலான சமாதி ஒன்று அமைக்கப்படும். (கி-இ)

# 3-லட்சம் ரூபா செலவில் சுழிபுரத்தில் தபால் நிலையம்

சுழிபுரம், திங்

சுமார் 3 லட்சம் ரூபா செலவில் சுழிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய தபால் நிலையத்தை தபால்தந்தி, வீடமைப்பு அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் அடுத்த மாதம் முதலாம்திகதி பிற்பகல் திறந்துவைப்பார்.

சுழிபுரம் பறளாய்ச் சந்தியில் சகல வசதிகளுடனும் இத் தபால் நிலையம் கட்டப்பட்டுள்ளது.

திறப்புவிழாவின் பின்னர் கலைநிகழ்ச்சி ஒன்றை நடத்தவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (இ

# விவசாயக் கடனிலிருந்து விதிவிலக்கு அளிக்கவும்

## அமைச்சரிடம் கோரிக்கை

பண்டத்தரிப்பு, திங்கள்

''சமீபத்தில் ஏற்பட்ட பெருமழையினுல் இப்பகுதியிலுள்ள பெரும்பாலான விவசாயிகளின் மிளாகாய்த் தோட்டங்கள் உட்பட புகையிலை, வெங்காயப்பயிர்கள் முற்றாக சேதமடைந்துள்ளன. எங்கள் ப. நோ. கூ. சங்கத்தில் விவசாயக்கடன் பெற்று தங்கள் விவசாயத்தில் முதலிட்ட விவசாயிகள் வருமானம் எதுவும் எடுக்கமுடியாது மிகவும் கஷ்டநிலையில் உள்ளார். ஆகவே இந்த விவசாயிகள் சங்கத்தில் பெற்ற விவசாயக் கடன் பணத்தைத் திருப்பி செலுத்த சக்தியற்ற சூழ்நிலையில் இருப்பதால் அதிலிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும்''.

மேற்கண்டவாறு கமத்தொழில், விவசாய அமைச்சரை கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுசங்கத்தின் இயக்குநர் சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தின் பிரதிகள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ)

## மாருதி விவகாரகமிஷன்

சென்னை மே 23

இந்திராகாந்தியின் மகன் சஞ்சய் காந்தியின் மாருதி கம்பனியில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல்களையும் முறைகேடுகளையும் விசாரிக்க இந்தியாவின் உயர் நீதிமன்றமொன்றின் நன்மை நீதிபதி ஒருவர் இதயதுல்லா தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது (கெ-இ)

**மணிவாக்கு**

வீடு பெருமை பெறுவது பண்புடைய மனைவியால்; அந்த மனைவி பெருமிதம்கொள்வது புத்திசாலியான புதல்வர்களால்; புதல்வர்களுக்கு மாண்பு விளைவதுபள்ளிப் படிப்பால்; பள்ளிக்குப் புகழ் உண்டாவது ஒழுக்கத்தை போதித்து அறிவுதரும் பாடத்திட்டங்களால்.

—விவேகசிந்தாமணி.

ஈழநாடு
THE EELANAADU

## வாக்காளர் கடமை

தேர்தல்களத்தில் குதிப்பதற்கு அரசியல்கட்சிகளும் சுயேச்சைவாதிகளும் தீவிர முஸ்தீபுகளில் இறங்கியுள்ள அதே சமயம், பொதுத்தேர்தலை நல்ல முறையில் நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகளில் தேர்தல் திணைக்களம் ஈடுபட்டுவருகின்றது.

மக்கள் தமது ஜீவாதார உரிமையான வாக்குரிமையை அச்சமின்றியும் இரகசியமாகவும் பயன்படுத்திக்கொள்வதற்கான உரிய ஏற்பாடுகளை செய்து கொடுப்பதும், வாக்களிப்பு முடிந்ததும் அவைகளை சந்தேகத்துக்கு இடம்வைக்காதமுறையில் எண்ணி கணக்கிட்டு மக்கள் தீர்ப்பை வெளியிடுவதும் இந்த திணைக்களத்தின் பிரதான கடமையாகும்.

கடந்த காலங்களிலும் கூட தேர்தல்திணைக்களத்தைப் பொறுத்தவரையில் எதுவித குறிப்பிடத்தக்க புகார்களும் எழுந்ததாகத் தெரியவில்லை.

அதே பாரம்பரியத்தை இம்முறையும் தேர்தல் திணைக்களம் நிலைநாட்டும் என்பதில் சந்தேகமில்லை.

பொதுத்தேர்தல் நீதியாகவும், சுதந்திரமாகவும் நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் திரு. பீலிக்ஸ் டயஸ் அபயசிங்க உறுதியளித்துள்ளார். அவரது இந்த உறுதிமொழியை பிசகின்றி நிறைவேற்றித் தரும் பணியில் 55,000 அரசாங்க ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர்.

தேர்தல்கால கடமைகள் பற்றி இவர்களுக்கு முறையான பயிற்சியளிக்கப்பட்டிருக்கும் என்பதால் அவர்களை பொறுத்தவரையில் முறைகேடுகளுக்கு இடமிருக்காது என நம்பலாம்.

ஆனால் இவர்களின் பணிகள் வெற்றிகரமாக செயல்படுவதற்கு தேர்தலில் ஈடுபடும் அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும், அவர்களின் பிரதிநிதிகளும் ஒத்துழைக்கவேண்டியது அவசியமாகும். எல்லாவற்றுக்கும்மேலாகவாக்காளப்பெருமக்களின் ஒத்துழைப்பு இன்றிஅமையாததா.

வாக்காளர் தமது கடமைகளை உணர்ந்து செயல்படுவார்களானல் எந்தவித புகார்களுக்கும் இடம்ஏற்படமாட்டாது.

## இணுவில் சம்பவம்

இணுவிலில் இரு பொலிஸ் வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் எவருக்கும் மகிழ்ச்சியளிக்கும் விஷயமல்ல.

காரணம் எதுவானலும் பிரச்னைகளை துப்பாக்கி முனையில் தீர்த்துக்கொள்ள முனைவதைக் கண்டிக்காமல் இருக்கமுடியாது. இதே சமயம் அந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைத் தொடர்ந்து ஆங்காங்கே பொதுமக்களும், வர்த்தக நிலையங்களும் தாக்கப்பட்டிருப்பது கவலையளிப்பதாகும்.

நடந்துபோன துரதிர்ஷ்ட சம்பவம் தொடர்பான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்குபொலிஸ் இலாகாவும்,விசாரிப்பதற்கு நீதிமன்றமும், தண்டனையளிக்க சட்டங்களும் உண்டு.

அவ்வாறிருக்க ஒரு சிலர் வெறிகொண்டவர்கள் போல், ஏதும் அறியாத பொதுமக்களை கண்மூடித்தனமாகத் தாக்கிக் கொடுமைப்படுத்துவது வரவேற்கத் தக்கதல்ல. இது விஷயமாக அரசு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்ப்போம்.

## "மக்களின் இறைமை பாதுகாக்கப்படவேண்டும்"

### பிரதமரின் குடியரசு செய்தி

கொழும்பு, திங்கள்

"கடந்த 5 வருட காலத்தில் எமது அரசாங்கம் பல அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தியுள்ளது. மேலும் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இது ஒரு சாதனையாகும்" என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குடியரசு தினத்தையொட்டி வெளியிட்ட செய்தியில் கூறியிருக்கிறார்.

"மக்களது இறைமை பாதுகாக்கப்பட்டுள்ளது. இதனை பேணிப் பாதுகாப்பதற்கு நாம் தொடர்ந்தும் போராட வேண்டும்" என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்

### ஜனதிபதி செய்தி

ஜனதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ விடுத்துள்ள வாநொலிச் செய்தியில், "குடியரசு பிரகடனத்தின் மூலம் நம்மை நாமே ஆளும் நிலைமை உருவாகியுள்ளது. மக்கள் தமக்குள்ள பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

### வாழ்த்துச் செய்திகள்

இது இவ்வாறு இருக்க குடியரசு தினத்தையொட்டி பல வெளிநாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளன.

சோவியத் யூனியன் தனது வாழ்த்துச்செய்தியில், "இரு நாடுகளுக்கும் இடையேயான சிநேகபூர்வ உறவுகள் உலக சமாதானத்தில் அடிப்படையில் நிலைக்கவேண்டும்" என்று கூறியுள்ளது.

மக்கள்சீனக் குடியரசு "இலங்கை சகல வளங்களும் கிடைக்கவேண்டும்" எனஆசி கூறியுள்ளது.

ஜப்பான் அரசு இலங்கைக்கு சகல செல்வங்களும் கிடைக்கவேண்டும்' என. வாழ்த்தியுள்ளது.

குடியரசு தினக் கொண்டாட்டங்கள் ஆடம்பரமற்ற விதத்தில் காலிமுகத்திடலில் நடைபெற்றன.

கொச்சிக்கடை பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜையில் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் கலந்து கொண்டார். (உ)

# 'தலைவிதியை நிர்ணயிக்க தமிழினத்திற்குரிமையுண்டு'

## தந்தை செல்வா நூல் வெளியீட்டு வைபவத்தில் வி.பி.

யாழ்ப்பாணம், செவ்

"இருபத்தைந்து ஆண்டு காலமாக பெரியார் செல்வநாயகத்திற்கு அரசியலில் முரண்பட்ட நிலையிலிருப்பவன் போல் வெளியுலகிற்குத்தோன்றிய நான் ஒன்றுசேர்ந்து உழைக்கும் நேரத்தில் அவர் பிரிந்தது மிக்கவேதனைக்கு உரியது".

இவ்வாறு யாழ். சட்ட நிலயத்தில் நிகழ்ந்த தந்தை செல்வா அஞ்சலிக் கூட்டத்திலும், திரு.மா.குலேந்திரன் எழுதிய செல்வா வாழ்க்கை நூல் வெளியீட்டு வைபவத்திலும் கலந்து கொண்டு பேசுகையில் திரு. வி. பொன்னம்பலம் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தமிழ் இனத்தைத் தேசிய இனமாக அங்கீகரித்துஅவர்கள் வாழும் பிரதேசங்களை அவர்களது தாயகங்களாக அங்கீகரித்துச் சுயநிர்ணயஉரிமையிலான சுயாட்சியை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற சித்தாந்த அடிப்படையிலான இலக்குக்காக நான் பாடுபடுகின்றேன். இனப்பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வழிகளை முதலில் மார்க்ஸும் பின்னர் லெனின், இனம் என்றல் என்ன என்பதன்மூலமும்எடுத்துக் காட்டினர்கள்.

### தேசிய இனம்

லெனினின் கோட்பாட்டின்படி ஒரு இனம் தேசிய இனமாக இருப்பதற்குப் பின்வரும் ஐந்துநிபந்தனைகள் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். 1. அவர்கள் ஒரே மொழி பேசுபவர்களாக இருத்தல் வேண்டும். 2. ஒரு குறித்த பிரதேசத்தில் அவர்கள் செறிந்து வாழவேண்டும். 3. ஒரே பண்புடையவர்களாய் ஒரே நாகரிகம் உடையவர்களாய் இருக்க வேண்டும். 4. உணர்வாலே அவர்கள் ஓரேமக்கள் என்னும் உணர்வைக் கொண்டிருத்தல் வேண்டும். 5. சுயமாக இயங்கத்தக்க பொருளாதார அமைப்பை உடையவர்களாய் இருத்தல்வேண்டும்.

### தமிழர் தேசியஇனம்

சிறுபான்மை இனங்களும் வளர்ச்சியுறும் பொழுதுதேசிய இனங்களாக மாறுகின்றன.

1942ல் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி வெளியிட்ட முதல்பிரசுரத்திலேயே தமிழர் தம்மைத்தாமே ஆள உரிமையுடையவர்கள். எந்த நிபந்தனையுமின்றி, விரும்பினல் தனியரசு அமைக்கும் உரிமை உடையவர்கள் என்பதைக் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றிருந்தது.

"கம்யூனிஸ்ட்கட்சி ஒருசர்வதேசிய இயக்கம். இருப்பினும் பிறரோடு சேரும்போது தனித்துவத்தைஇழந்துவந்து 1956ல் சிங்களமக்களிடையே ஏற்பட்ட தேசிய விழிப்புணர்ச்சியின் காரணமாகத்தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளைப் புறக்கணித்து விட்டது. இதனல் தமிழ் மக்களிடையே இடதுசாரி இயக்கங்கள் எதிரி இயக்கங்களாக மாறிவிட்டன. இதனை உணர்ந்து இலட்சிய ரீதியாக இந்த உடன்பாட்டை ஏற்று 70க்குப் பின்பே நான் செயற்பட்டேன்.



"72ம்ஆண்டில் பெரியவரை எதிர்த்து என்னைப் போட்டியிடும்படி கேட்டபோது அவ்விடைத்தேர்தலில் நிலையான நிலைப்பாட்டை முன்வைக்கத் தவறின் அவரை எதிர்ப்பதற்கான தார்மீகக் காரணம் ஒன்றில்லை என்பதை உணர்ந்தேன். உலகநிர்ப்பந்தமேற்படக்கூடிய சூழ்நிலையில் காங்கேசன்துறை இடைத்தேர்தல் நிகழ்ந்தபோது பிரதேசசுயாட்சியை ஏற்று கம்யூனிஸ்ட் கட்சித்தலைவரும் செயலாளரும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டாலே நான் தேர்தலில் போட்டியிட முடியும் என்று கூறினேன். இதனை ஏற்று 10,000 துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு கம்யூனிஸ்ட்கட்சி வழங்கியபோது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும், லங்கா சமசமாஜக்கட்சியினரும் தேர்தலுக்கு முதல்நாள் இரவு 'நீர் ஐக்கியமுன்னணி அபேட்சகராகத்தான் போட்டியிடுகின்றீர். இவையெல்லாம் தேவையில்லை' என்று எனது தலைவர்களுக்கு முன்னல் எனக்குச் சொன்னர்கள். இதற்கு எனது தலைவர்களும் தலையசைத்தார்கள்.

### மனச்சாட்சிக்குத் துரோகம்

"இந்நிலையில் முப்பதுவருடமாக நான் சார்ந்து நின்ற ஒரு சர்வதேசிய இயக்கத்தை இரவோடு இரவாக உதறிவிடுவதா என்ற ஏக்கத்தில் எனது மனச்சாட்சிக்குத் துரோகம் செய்து பெரியார் செல்வநாயகத்துடன் தேர்தலில் போட்டியிட்டேன்.

### இனப்பிரச்னை தீரவழி

"உலகில் இனப்பிரச்னைகள் தீர இருவழிகள்உண்டு. ஒன்று அதாவது சிறிய இனத்தைப் பெரிய இனம் விழுங்குவது.

இரண்டாவது வழி, இப் பெரிய அபாயத்தை எதிர்த்து இனத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடுவது. நியாயமான-பரிசுத்தமான இந்தவழியைத்தான் பெரியவர் நன்கு உணர்ந்திருந்தார். இந்தப் பாதையில்தான் அவர் சென்ருர்.

### தமிழ்ப்பிரதேசம் எது?

"தமிழர்களுடைய பிரதேசம் எது என்ற கேள்வி அன்று முதல் இன்றுவரைநிலவுகிறது. சுருக்கமாகச் சொல்லப் போனல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் பாரம்பரியமாக வாழும் பிரதேசமெல்லாம்அவர்களுடைய தமிழ்ப்பிரதேசமே.

"அசல் சோஷலிசத்தைக் கடைப்பிடிக்கும் நாடுகள்அதாவது டண்டா சோஷலிசத்தை அல்ல-உண்மையான சோஷலிசத்தை-விஞ்ஞான சோஷலிசத்தைக் கடைப்பிடிக்கும் நாடுகள் இனபேதத்தைக் கடைப்பிடிப்பதில்லை. இங்கு நான் ஒரு இடதுசாரியாக இருந்தும்கூட இனஅடிப்படையில் நிகழும் கொடுமைகளை எதிர்க்கமுடியாதவனக இருந்தேன்.

"ஒருமுறை திரு. கதிரவேற்பிள்ளை என்னிடம் கேட்டார். 'தம்பி நீ சார்ந்திருக்கும் இயக்கத்தில் இருந்தபடியே நீயேன் தமிழர்களுடைய பிரச்னைக்கான தீர்வை அணுகக்கூடாது' என்று. இதைப்பற்றி நான் நன்கு சிந்தித்தேன். பின்பு ஒருமுறை நான் ஒரு மேடையில் கேட்டேன். "தமிழர் கூட்டணியினர் போராடப் போவதாகச் சொல்கிறர்களே எந்த நாட்டின் உதவியுடன் போராடப் போகிறர்கள்" என்று. இதற்கு திரு கதிரவேற்பிள்ளை ஒருநண்பர்மூலம் "எந்த நாட்டினை தம்பி வி. பி. நம்பியிருக்கின்றரோ அந்தநாட்டின் உதவியுடன் எனச் சொல்லுங்கள் என்று சொல்லி அனுப்பினர்.

### நட்பு தவிர்க்க முடியாது

'இத்தகைய நிலைமை உருவாகும் இந்நேரத்தில் நிச்சயமாக நாம் நட்புப்பூண்டு நடக்க வேண்டியது தவிர்க்கமுடியாதது. கூட்டணியின் நியாயமான கோரிக்கையை தான் சார்ந்து இருக்கும் இயக்க சார்பில் நின்று காத்துள்ளேன். சர்வதேசியஇயக்கமொன்றைச் சார்ந்த நான், தமிழர் கூட்டணியுடன் இணைந்து அவ்வியக்கத்தைத் துண்டுதுண்டாக்கவிரும்பவில்லை. தேசிய மேம்பாடுகளை உருவாக்க விரும்பினேன்.

### ஜி. ஜி. சொன்னது

"என்னுடைய் தலைமைப் பீடத்துடன் இதுதொடர்பாக பலமுறைபேசினேன். இறுதியில் திரு. மாணிக்கவாசகர் போன்ற பெரியார்களுடன் சேர்ந்து தமிழர்களுடையபிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய 20 அம்சத்திட்டத்தை தயாரித்தேன். இதன் ஆரம்பகாலக் கட்டத்தில் நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாகப் பல தலைவர்களதும் ஆலோசனையை நான் பெற்றேன். உதாரணமாக தமிழ்மொழி ஒரு தேசிய மொழி என அத்திட்டத்தில் சேர்க்கப்படவேண்டுமென மறைந்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சொன்னர். குறைந்தபட்சம் தமிழர்களுடைய சுயாட்சி என்றலும் நிலைநிறுத்தப்பட்டாலே தீர்வு ஓரளவு பூரணமாகுமென திரு. விஜயானந்தன் மூலம் திரு. அமிர்தலிங்கம் ஆலோசனை கூறினர். இப்படிப் பலரது ஆலோசனையையும் பெற்றுத் தான் அந்த 20 அம்சத்திட்டத்தைத்தயாரித்தோம். இந்த அடிப்படையில்தான் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினேம்.

(7-ம் பக்கம் பார்க்க)

### ஆசிரியருக்குக் கடிதம்

## அதிகாரிகளின் கவனத்திற்கு

நானும் என்னைப் போன்ற பலரும் 1976 ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை விடைத்தாளைத் திருப்பிப் பார்ப்பதற்கென பாடம் ஒன்றிற்கு 25/- ரூபா செலுத்தி விண்ணப்பம் செய்திருந்தோம். அதற்கான பதில் எங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. இது குறித்து அதிகாரிகள் அறியத்தருவார்களா?

ஈ. ஜெகதீஸ்வரன்.

ஊர்காவற்றுறை.

# தமிழ்ஈழம்பற்றி பயமும் ஆசையும் காட்டுவோர் ஆள்சேர்க்கப்பார்க்கிறார்கள்

## வல்வை ஏரம்பமூர்த்திக்கு பதில்

திரு. ஏரம்பமூர்த்தி,
அவர்கள்

நீங்கள் 19-5-77ம் திகதிய விவாதமேடையில் இலங்கையில் காலத்துக்குக்காலம் அரசு செய்த அரசாங்கம் ஒவ்வொன்றும் தமிழருக்கும் தமிழுக்கும் இழைத்த அநீதிகள் அனந்தம் என்பதை எடுத்துக் கூறி, 'அந்த அநீதிகளை ஒழிக்க ஒரே வழி தமிழ் ஈழம் அமைப்பது தானு?' என்றுகேட்டு, 'எந்தச் சமாதான வழிகளாலும் தமிழ் ஈழம் பெற்றெடுக்க முடியாது என்பதைச் சிந்திக்கத் தெரிந்த சிந்தனையில் தெளிவுடைய எந்தவொரு தமிழ்மகனும் ஒப்புக் கொள்ளுவான்' என்று கூறியிருக்கிறீர்கள். மந்திரஞ் செபிப்பதாலோ, அவலக்குரல் எழுப்புவதாலோ சிங்களக்கட்சிகளுடன் கூட்டுச் சேருவதாலோ, தமிழ்ஈழம் வந்து விடாதென்றும். சிங்களப் பொதுமக்களோ, சிங்களக்கட்சிகளோ நாட்டைத் துண்டு போடுவதற்குச் சம்மதிக்க மாட்டார்கள் என்றும் சிந்தித்துத் தெளிந்து கூறியிருக்கிறீர்கள்.

தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளிலிருந்து விடுபடுவதற்குத் தமிழீழம் அமைப்பது வழியல்லவாயின், அவ் அநீதிகளிலிருந்து விடுபடுவதற்குரிய வழியை, சிந்திக்கத் தெரிந்த சிந்தனையில் தெளிவுடைய நீங்கள் கூறியிருக்க வேண்டும். சிங்களவரால் இழைக்கப்படும் அநீதிகளிலிருந்து தமிழ்ப்பேசும் மக்கள் விடுபடுவதற்குரிய வழியை நீங்கள் கூறவில்லை. எனவே நீங்கள் சிங்களவரால் இழைக்கப்படும் அநீதிகளிலிருந்து தமிழ் பேசும் மக்கள் விடுபடுவதற்குரிய வழியைப்பற்றிச் சிந்திக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

மந்திரஞ் செபித்தோ, அவலக்குரல் எழுப்பியோ, ஒப்பந்தஞ் செய்தோ தமிழ்ஈழம் அமைக்கலாமா என்பதுபற்றித் தான் நீங்கள் சிந்தித்துத் தெளிந்திருக்கிறீர்கள்.

உங்கள் கருத்துகள் விவாத அரங்குக்கு வந்துவிட்டபடியால் விவாதத்துக்காகச் சிலவற்றைக் கூறவேண்டியிருக்கிறது.

### கணித ரீதியாகத் தீர்க்கும் பிரச்னைகள்

நீங்கள் இன்றைய ஸ்ரீலங்காவில் எத்தனை மக்கள் வாழ்கிறார்கள்? அவர்களில் சிங்களவர் எத்தனைபேர்? முஸ்லிம்கள் எத்தனைபேர்? என்று கணக்கிட்டு, வடக்குக்கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தமிழ்பேசும் மக்களின் 60 வீதமானோர் வாழ்வதால் வடக்குக்கிழக்கு மாகாணங்களைக் கொண்ட தமிழ்ஈழம் அமைக்கப்படக்கூடாது என்று கூறுகிறீர்கள். உங்களுடைய நோக்கைச் சிறிது விரித்து நோக்குங்கள். அப்படி நோக்கினல், ஸ்ரீலங்காவின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்பேசும் மக்களிலும் பார்க்க ஏறக்குறைய 37 மடங்கு தமிழ்பேசும் மக்கள், வடக்குக்கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்கிறார்கள். அத்தனை மக்களையும் வெளியே விட்டுவிட்டு இக் குறுகிய எல்லைக்குள் தமிழீழத்தை அமைப்பதா என்று கேட்பீர்கள். தமிழ்பேசும்மக்களின் பிரச்னை கணிதரீதியாகத் தீர்க்கக்கூடிய பிரச்னையல்ல. அவர்களின் பிரச்னை உரிமைப் பிரச்னையும் அரசியற் பிரச்னையுமாகும். ஈழத்தமிழ் மக்கள் தங்கள் மன்னர் ஆண்ட பூமியைத் தாமே ஆளவேண்டுமென்று குரல் கொடுக்கிறார்கள். தமது மண்ணைத் தாமே ஆள்வது தமிழரது உரிமை. வடக்குக் கிழக்குக்கு வெளியே தமிழ்பேசும் மக்கள் வாழ்கிறார்கள் என்பதற்காக வடக்குக்கிழக்குப் பகுதிகளில்வாழும் தமிழ்மக்கள் தமது உரிமையை விட்டுக் கொடுக்க வேண்டுமா? மாலைதீவில் வாழும் முஸ்லிம் மக்களிலும் பார்க்கப் பல மடங்கு முஸ்லிம்மக்கள் அத் தீவுக்கு வெளியே வாழ்கிறார்கள். அதனுல் மாலைதீவு மக்களுக்கு தனிநாடு ஏன் என்று கேட்பீர்களா? ஆங்கிலேயருக்கு எமது நாடு அடிமைப் பட்டபின்பு ஸ்ரீலங்காவோடு தமிழ்ஈழம் பிணைக்கப்பட்ட

## விவாத மேடை

காரணத்தாலும் வேறு காரணங்களாலும் சிங்கள ஸ்ரீலங்காவில் தமிழ்பேசும் மக்கள் வாழ்கிறார்கள் என்பது உண்மை. அங்கு வாழ்பவர்களை வேற்றுநாட்டவர்என்றோ வேண்டாதவர்கள் என்றோ தமிழ்ஈழம் கோருவோர் கருதவில்லை. தமிழ்ஈழம் அமைக்கப்பட்ட பின்பும் ஸ்ரீலங்காவில் வாழும் தமிழ்பேசும் மக்கள் தமிழ்ஈழத்துக்கு வந்து இங்குள்ள மக்களோடு சரிநிகராக வாழலாம் என்றுதான் வட்டுக்கோட்டைத் தீர்மானம் கூறுகிறது. எனவே நீங்கள் ஸ்ரீலங்காவில் வாழும் தமிழ் பேசும் மக்கள்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

ஈழத் தமிழ்நாட்டில் வாழும் முஸ்லிம்கள் சிறுபான்மையோர் எனவும் அவர்கள் தம்மைத் தமிழர்கள் நியாயமாக நடத்துவார்கள் என்று நம்புவதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை என்று கருதுகிறார்கள் எனவும் கூறுகிறீர்கள். உங்கள் கூற்று ஸ்ரீலங்காவில் முஸ்லிம்கள் நியாயமாக நடத்தப்படுகிறார்கள் என்பதுபோலவும் தமிழ்ஈழத்தில் நியாயமாக நடத்தப்படமாட்டார்கள் என்பதுபோலவும் காட்ட முயகில்றது. புத்தளம் பள்ளி வாசல் சம்பவம் கிழக்கு மாகாணத்தில் அவர்களின் தாயகம் திட்டமிட்ட குடியேற்றத்தால் அபகரிக்கப்பட்டதையும் இன்னும் இதுபோன்ற சம்பவங்களையும் அவர்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள். மூதூர் முகமதலியும் கல்முனை அகமதுவும் கட்சிவிட்டுக் கட்சி மாறியிருக்கிறார்கள் என்பதற்காக முஸ்லிம் மக்கள் அத்தனை பேரும் கட்சி மாறுபவர்கள் என்று கருதி, ஏன் அச்சமுதாயத்துக்குக் களங்கம் ஏற்படுத்துகிறீர்கள். தியாகராசாவும் அருளம்பலமும் இராசன் செல்வநாயகமும் மாட்டினும் கட்சி மாறவில்லையா? இவர்கள் கட்சி மாறினுர்கள் என்பதற்காக தமிழர் அனைவரும் கட்சிவிட்டுக் கட்சிபாய்பவர்கள் என்றுகருதலாமா? தேவையற்ற பிரச்னைகளை எழுப்பி ஒரு மொழிபேசும் ஒரே பிரதேசத்தில் வாழும் மக்களிடையே ஏன் பாகுபாடு காண்பிக்கிறீர்கள்!

### முஸ்லிம்கள்பற்றிய திருமலை தீர்மானம்

1956ம் ஆண்டில் திருமலையில் நடந்த தமிழரசுக்கட்சி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பான தீர்மானத்தை நீங்கள் அறியாமலிருக்கலாம். அதை முஸ்லிம்கள் அறிந்திருக்கிறார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியும் இஸ்லாமிய ஐக்கிய முன்னணியும் எந்த அடிப்படையில் இணைந்திருக்கின்றன என்பது. உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அது முஸ்லீம்களுக்குத் தெரியும். தமிழ் ஈழத்தில் முஸ்லிம்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கும். தமிழ் மக்களுக்கு உள்ள உரிமைகள் அத்தனையும் தமக்கு இருக்கும் என்பது முஸ்லிம்களுக்குத் தெரியும். நீங்கள் ஒருதமிழர், உங்களுடைய பிரச்னையைப் பற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்கும் வராத நீங்கள் முஸ்லிம்களின் பிரச்னைக்குள் புகுந்துஏன் குட்டையைக் குழப்புகிறீர்கள்!

ஈழத்தமிழ்நாடு ஏற்பட்டால், அது இந்தியாவுடன் இணைந்து இலங்கை முழுவதையும் விழுங்கிவிடும் என்பது சிங்கள மக்களின் சந்தேகம் என்றும்; தமிழரசுத் தலைவர்கள், தமிழகத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியது சிங்கள மக்களின் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தி விட்டதென்றும் கூறுகிறீர்கள். சோழர் இலங்கையை ஆண்ட வரலாறு சிங்களவரைப் பயப்படுத்துகிறது என்று கூறுகிறீர்கள். சிங்களவர்கள் சந்தேகிக்கிறார்கள் என்பதால் நாம் தமிழகத் தலைவர்களைச் சந்திக்கக் கூடாது எனவும், தமிழ் ஈழமும் இந்தியாவும் இணைந்து விட்டால் என்ன நிகழுமோ என்று சிங்களவர் அஞ்சுவதால் தமிழ் ஈழம் அமையக் கூடாதெனவும் நீங்கள் கருதலாம். வாதத்துக்காக உங்கள் கருத்தை ஏற்றுக் கொள்வோம் தமிழகத் தலைவர்களைச் சந்திக்காமலும், தமிழ் ஈழம் அமைக்காமலும் விடுவோம். சோழர் இலங்கையை ஆண்டவரலாற்றை அறிந்து சிங்களவர் அஞ்சுகிறார்கள் என்றுல் அதற்காக என்ன செய்யலாம்! வரலாற்றை மாற்றமுடியாது. அது நடந்து முடிந்த சம்பவம். ஆகவே அவர்களுடைய அச்சத்தை அகற்ற என்னசெய்ய வேண்டும் என்றுகருதுகிறீர்கள்? வரலாற்றை அழிக்க முடியாதாகையால் ஈழத்தில் இருக்கும் தமிழர்களை அழிக்க வேண்டும் என்கிறீர்களா? தமிழர்களுக்கு இவ்வுலகில் தனியானதொரு நாடில்லை. அப்படியிருந்தும் அயல் நாட்டில் மிகச் சிறுபான்மையினராகத் தமிழர் வாழ்வதைக் கண்டுசிங்களவர் பயப்படுகிறார்கள் என்றுல் உலகில் எத்தனையோ முஸ்லிம் நாடுகள் இருக்கும் போது இந்நாட்டில் வாழும் முஸ்லிம் மக்களைக் கண்டு ஏன் சிங்கள மக்கள் நடுங்கவில்லை! சிங்களமக்கள் பாவம் பயப்படுகிறார்கள். அவர்களுடையபயத்தைப் போக்க என்ன செய்ய வேண்டுமென்கிறீர்கள்!

### மாடுமிரளுவதால் கழுத்தைவெட்டுவதா?

உங்களுடைய தலைக்கறுப்பைக் கண்டு காட்டுமாடு மிரளுகிறது என்பதற்காக காட்டுமாட்டைக் கண்டவுடன் உங்களுடைய கழுத்தை அறுத்து தலையைக் கைப்பைக்குள் போட்டுக் கொள்வீர்களா? உண்மையில் சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்குப் பயந்தால் அவர்களோடு சமாதானமாக வாழ்வதையே விரும்புவர்; அதைவிட்டு எம்மை அடக்கி ஆள முற்படமாட்டார்கள். உங்கள் வாதப்படி ஏகாதிபத்திய நாடுகள் குடியேற்ற நாடுகளுக்குப் பயந்து அவற்றை அடிமைப்படுத்தின என்று கூடக் கருதவேண்டியிருக்கும். இந்தவிதமான விசித்திரமான விளக்கத்தைக் கொடுக்க ஏன்முன் வருகிறீர்கள்.

நான் உங்களுக்கொன்று கூறுவேன், நீங்களும் உங்களைப் போன்ற மிகச்சிலரும் தமிழ்பேசும் மக்களைப் பயங்காட்டித் திசைதிருப்ப முயற்சிக்கிறீர்கள். இன்னெரு சிலர் தமது இலட்சியமும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியந்தான் என்று கூறுகிறார்கள் இன்னுஞ் சிலர் தாமே முதலில் தமிழ் ஈழம் கேட்டதாகக் கூறுகிறார்கள். தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு வெளியே நின்று தமது கொள்கையும் கூட்டணியின் கொள்கையே என்று கூறுவோரும், தாமே முதலில் 'தமிழ் ஈழம் கேட்டதாகக் கூறுவோரும்' அதை அடைவதற்கு என்ன செய்தார்கள்! இந்தவகையில் தமிழ்ஈழத்தை மையமாகக் கொண்டு பயங்காட்டுவோரும் ஆசை காட்டுவோரும் ஒரு வகுப்பையே சேர்ந்தவர்கள் இருபகுதியாரும் ஆட்சேபிக்கப்பார்க்கிறார்கள். தங்கள் வண்டிகளில் தமிழ்ப் பிரயாணிகளை ஏற்றப்பார்க்கிறார்கள், இப்பொழுது நாம்மூன்று வண்டிகளைக் காண்கிறேம். அதில் உங்கள் வண்டி செல்லும் வழி தெரியாத வண்டி. சேரவேண்டிய இடத்தைக் காட்டும் விளம்பரப் பலகையே உங்கள் வண்டியில் இல்லை. இரண்டாவது வண்டியில் சேரும் இடத்தைக் காட்டும் விளம்பரப்பலகை இருக்கிறது. ஆனுல் அது இயங்காதவண்டி தப்பித்தவறி யாராவது அதில் ஏறிக்கொண்டாலும் அது நின்ற இடத்திலேயே நிற்கும். வேண்டுமானுல் பயணிகள் வண்டியிலிருந்து இறங்கி அதைத் தள்ளிப்பார்க்கலாம், தள்ளினுலும் ஓடுமோ என்னவோதெரியாது. எப்படியும் அதில் ஏறியவர்கள் நின்ற இடத்தில் நிற்கலாம்., மூன்றுவது வண்டி செல்லும் இடத்தை நோக்கி ஓடும் வண்டி. அந்த வண்டியில் இருப்பவர்கள் அதன்வேகம் போதுமா போதாதாஎன்று மாத்திரம் பிரச்னைப் படுகிறார்கள். இப்பொழுது நாம் எந்த வண்டியில் ஏறவேண்டு மென்பதை தீர்மானியுங்கள்.

ஆ. நடராசா.
மட்டுவில்

## வேலரும் மயிலரும்



வேலர்: குடிகாரர்களின் வோட்டைக் கணக்கெடுக்கக் கூடாது.
மயிலர்: ஏன்
வேலர்: அது தண்ணியிலே போட்ட புள்ளடி.

—சுந்தர்

## நலன்புரிச் சங்கம்

யாழ்ப்பாணம், செவ். யாழ். அரசினர் வைத்திய சாலை பிராந்திய வைத்திய ஆய்வுகூட நுணுக்காய்வாளர்கள் தங்களுக்கான நலன்புரிச் சங்கமொன்றை ஆய்வுகூட மேலதிகாரி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைத்தனர்.

இச்சங்கத்தின் தலைவராக திரு. செ. ஆறுமுகமும் உபதலைவராக திரு சு. பத்மநாதனும் செயலாளராக திரு. ச. முருகேசம்பிள்ளையும் உதவிச் செயலாளராக திரு வே. கந்தையாவும் பொருளாளராக திரு. ச. சிறிக்கண்ணனும் நிர்வாக உறுப்பினர்களாக திரு. ஜே. எவ். சேவியர், திரு. நா. சபாரத்தினம், திரு கு. பஞ்சாட்சரம், திரு. க. சிவப்பிரகாசம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## தற்கொலை

பண்டத்தரிப்பு, திங் மாதகல் மேற்கைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் வாழ்க்கையில் எற்பட்ட விரக்தியினுல் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது;

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் கடமையாற்றிய எஸ். அருணுசலம் என்னும் 32வயது வாலிபரின் மரணம் பற்றி மானிப்பாய் மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி ஏ. சேனுதிராசா விசாரணை நடத்திஞர். காலமானவரின் மனைவி, சகோதரன் ஆகியோரின் சாட்சியத்தையடுத்து தற்கொலை என்று திர்ப்பு வழங்கப்பட்டது.

வட்டுக்கோட்டை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் என். தர்மேந்திரா பிரேத பரிசோதனை நடாத்தினுர்.

(இ)

## இன்று திறப்புவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேர்தல் அலுவலகம் ஒன்று இன்று மாலை கோவில் வீதி ஒழுங்கையில் சஞ். யுவானியார் கோவிலுக்கு அருகில் திறந்து வைக்கப்படவிருக்கிறது. கூட்டணிப் பிரமுகர்கள் பலர் உரையாற்றுவார்கள்.

(கி-அ)

# "செல்வா கட்டிய ஒற்றுமைக் கப்பல் சுதந்திரதுறைமுகம் சென்றேதீரும்"

## கொழும்பு அஞ்சலிக்கூட்டத்தில் 'அமிர்'

கொழும்பு, திங்கள்

"அமரர் மூதறிஞர் செல்வா கட்டி எழுப்பிய ஒற்றுமைக் கப்பல் சுதந்திரத்துறை முகத்தை அடையும்வரை அதனை எக்காரணம்கொண்டும் உடையவிடமாட்டோம். எப்பாடுபட்டும் அவரின் லட்சியமான தமிழ்நாடு காண்போம். இது அமரரின் அந்தராத்மா மீது ஆணை"

வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்ற தந்தை செல்வாவின் அஞ்சலிக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரும் தமிழரசுக்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் இவ்வாறு கூறினர்.

ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இவ்வஞ்சலிக் கூட்டத்தில் சகல கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டு பேசினர்கள். திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

### தந்தைக்கு திடமான நெஞ்சம்

தந்தையவர்கள் தோல்வியைக் கண்டு கலக்கமோ, வெற்றியைக் கண்டு பெருமிதமோ இன்றி இரண்டையும் சமமாகவே கருதினர். 1956ல் தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து காலிமுகத்திடலில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் ஆயிரக்கணக்கானேர் சூழ்ந்துகொண்டு சரமாரியாகக் கற்களை வீசினர்கள், தாக்கினர்கள். வன்னியரதும் நாகநாதனதும் உடைகள் கிழிக்கப்பட்டன. எனது தலையில் காயமேற்பட்டு இரத்தம் பாய்ந்தது. தந்தையினுடைய மைந்தர் இருவர் அவரது கண்ணுக்கு முன்னுலேயே தாக்கப்பட்டு தூக்கி எறியப்பட்டார்கள். அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்த அவர் தான் இருந்த இடத்தைவிட்டு அசையவே இல்லை. திடமான—தைரியமான நெஞ்சம் அவடாரோ அவ்வாறேதந்தை செல்வாவும் சிங்கள மக்களாலும் மதிக்கப்பட்டு மக்கள் தலைவராக விளங்கினர். அவர் ஒரு தத்துவஞானி. மலையக மக்களின் பிரஜாவுரிமைக்காக அவர் தீர்க்கதரிசனத்தோடு குரல் கொடுத்தார். இன்று விடுதலைக்கு வழிகாட்டினர். தமிழினத்தின் ஏகப் பிரதிநிதித்துவம் வாய்ந்த அமைப்பு தமிழர் விடுதலைக்கூட்டணியே என்பதை அங்கீகரிக்கச்செய்த சக்தி தந்தை செல்வா.

நடக்க, பேச இயலாதநிலையில் அவர் இருந்தாலும்மிகுந்த துணிச்சல்காரர்அவர். பேரவையிலும் தனிநாடு கேட்ட தைரியம் அவருடையது. அவர் காட்டிய வழி தேர்தலுக்காக வல்ல நமது அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்காகவே.

சிறந்த தலைவர்களை அவர் உருவாக்கிவிட்டுச் சென்றிருக்கிறர். அவர்கள் தலைமையில் அவர்களுடன் இணைந்து அவர் நான் [illegible] ஈடுபட்ட காலந் தொடங்கி தந்தை செல்வநாயகத்திடம் மிகுந்த மதிப்பைக் கொண்டிருந்திருக்கிறேன்.

### மனச்சாட்சிக்கு விரோதமானதால் நான்வாக்களிக்கவில்லை

அவரை எதிர்க்க நேர்ந்த சந்தர்ப்பங்களிலும் அவரிடம் உயர்ந்த மதிப்பு எனக்கு இருந்தது. அவரையொத்த சிறந்த ஒரு மனிதரைக்காணமுடியாது. அண்மையில் நடைபெற்ற காங்கேசன்துறை இடைத்தேர்தலில் நான்எனது வாக்கை என்மனச்சாட்சிக்கு விரோதமாக செயற்படமுடியாத நிலையில் வெறுமையாகவே மடித்து பெட்டியினுள் போட்டேன்.

"இப்போதுஅவரதுஅணியில் உரிமைகளுக்காகப் போராட நான் தயார். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கம்யூனிஸ்ட் கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் பகிரங்க உறவைக் கொண்டிருக்கிறது. உரிமையை அங்கீகரிக்கும் அடிப்படையிலான உறவே இதுவாகும். திரு. அமிர்தலிங்கம் தலைமையில் தமிழினத்தின் உரிமையைப்பெற பெரியார் செல்வநாயகத்தின் லட்சியத்தை நிறைவேற்ற ஒன்றுசேர்ந்து போராடுவோம்.

### எம். சிவா

"தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில், திரு. வ. பொன்னம்பலம் மதியில் ஏற்படுத்தினர். அதற்காக தன்னை எவ்வளவு தூரம் தாழ்த்த முடியுமோ அவ்வளவுக்குத் தாழ்த்தினர்.

### ஜி ஜி. வீட்டுக்குச் சென்றர்

விரோதங்களை மறந்து திரு. ஜி. ஜி. வீட்டுக்கு அவர் சென்றர். இப்படியாக அவர் ஏற்படுத்திய ஒற்றுமையை தேர்தலுக்காக உடைத்துவிட மாட்டோம்.

"எம்மை நாமே ஆளவேண்டும் என்ற அடிப்படையிலேயே அவர் சமஷ்டிக் கொள்கையை முன்வைத்தார்.

### பிரதமரின் செய்தி

"பிரதமர்திருமதிசிறிமாவோ பண்டாரநாயக்காவின் செய்தியை கூட்டத்தில் அமைச்சர் இலங்கரத்தின வாசித்தார்.

பிரதமர் தமது செய்தியில் கூறியுள்ளதாவது:

"திரு. செல்வநாயகத்தின் மறைவு தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றிஇலங்கைக்கே பெரும் இழப்பு. அவர் அடக்கமான சுபாவம் நிறைந்தவராகவும், ஒரு தத்துவஞானியாகவும், மனவலிமை நிறைந்தவராகவும் தமிழ்மக்களின் பெருந்தலைவராகத் தம்மை அர்ப்பணித்தார். பிறர் கருத்தை கேட்டறிவதில் ஆர்வம் கொண்டிருந்தார். திறமையும், அநுபவமும் முதிர்ச்சியும் வாய்ந்த தலைவரை இலங்கை இழந்துவிட்டது. நாட்டு மக்களின் கவலையில் நானும் பங்கு கொள்கிறேன் என்றும் பிரதமர் தமது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

### பிரதம நீதியரசர் செய்தி

பிரதம நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கோனும் செய்தியொன்றை அனுப்பியிருந்தார். செல்வா நினைவு [illegible] செயலாளரும் அரசாங்கஎழுதுவினைஞர் சங்கப் பொதுச்செயலாளருமான திரு. இ. பேரின்பநாயகம் அதனை அங்கு வாசித்தார். (ம-இ)

# தமிழ் மக்களின் தலைவராக

## தம்மை அர்ப்பணித்த தத்துவஞானி

"1956-ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டத்தை 24 மணி நேரத்தில் கொண்டுவருவேன் என்று சொன்னர் திரு. பண்டாரநாயகா. ஆனல் 21 ஆண்டுகளாகியும் அதனை நிறைவேற்ற முடியாதநிலையில் திருமதி பண்டாரநாயக்கா மொழிப்பிரச்னைக்கு தீர்வுகாண — தமிழையும் தேசியமொழியாக்க ஆயத்தமான ஒருநிலைக்கு அண்மையில் வரச்செய்து, யுத்தமுனையில் இத் தோல்வியை ஏற்படுத்தியவர் தந்தை செல்வநாயகம். தந்தையினுடைய மரணப் படுக்கைக்கு இரு வாரங்களுக்கு முன்னர் பிரதமர் தந்தையுடன் இதுபற்றிப் பேசினர்.

"30 வருடங்களாக என்னுடைய குருநாதராகவும், அரசியல் வழிகாட்டியாகவும் விளங்கிய தந்தையினுடைய தனித்துவமான அரசியல்வழி 1945ல் சோல்பரி அரசியல் திட்டத்தின்போது ஆரம்பமானது.

### தமிழ் தேசிய இனத்தின் தந்தை

"நாம் சிறுபான்மை இனம் அல்ல; நமக்கென்ற பிரதேசம், மொழி, பாரம்பரியம், பண்பாடு, கலை, கலாச்சாரம் கொண்ட நாம் ஒரு தேசிய இனம்; இந்த நாட்டை மீண்டும் ஆளும் உரிமை நமக்கு உண்டு என்று கூறி, அந்த அடிப்படையில் சமஷ்டிக் கொள்கையை அவர் வெளியிட்டார். தம்மை ஒரு தேசிய இனம் என முதல் முதலில் சொல்லவைத்தவர் என்பதாலேயே தமிழ்த்தேசிய இனத்தின் தந்தை என நாம் அவரை அழைக்கின்றோம்.

"தனிநாடு பற்றிய கோரிக்கையை முதன் முதலில் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் முன்வைத்தார். 75 வீதமான வாக்குகள் அவருக்குக் கிடைத்தன. 25 வீதம் வாக்குகள் நண்பர் பொன்னம்பலத்துக்குக் கிடைத்தன. இப்போது நண்பர் பொன்னம்பலமும் நம்மோடு சேர்ந்துவிட்டதில் தனிநாட்டுக் கொள்கைக்கு இப்போது நூறுவீத ஆதரவு கிடைத்துள்ளது. ருக்கு. கடமை உணர்ச்சியோடு காரியங்களில் செயல்பட்டார்.

### இலங்கரத்தின

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் கலந்துகொண்ட அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின, தமிழர்களின் தந்தையாக விளங்கிய திரு. செல்வநாயகத்தின் மறைவு இந் நாட்டுக்கே பெரும் இழப்பு என்றும், அந்தத் தலைவரின் மறைவுக்குப் பின்னராவது இரு இனங்களும் தங்களின் நிலையை உணர்ந்து ஐக்கியமாக வாழவேண்டுமென்று குறிப்பிட்டார்.

### ஜே. ஆர். ஜெயவர்த்தன

ஐ. தே. கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தன பேசுகையில், இந் நாட்டின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவராக விளங்கிய திரு. செல்வநாயகத்துடன் 1947-ம் ஆண்டிலிருந்தே நெருங்கிப் பழகிவந்தேன். அரசாங்கத்திலும், எதிர்க்கட்சியிலும் அங்கம்வகித்த திரு. செல்வநாயகம், பேரவையின் முக்கிய விவகாரங்களில் தகுந்த ஆலோசனைகளை வழங்குவார். பேரவையின் எந்த முக்கிய முடிவும் அவரது ஆலோசனை பெறப்பட்டபின்னரே மேற்கொள்ளப்படும். அவர் மிக உயர்ந்தவொரு கனவான் என்றர்.

### பீட்டர் கெனமன்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் திரு. பீட்டர் கெனமன், முதிர்ந்த தலைவரான திரு. செல்வநாயகம் தமது போராட்டங்களை அகிம்சைமுறையிலேயே நடத்தினர் என்றும் தமிழ்மக்களால் தந்தை எனப் போற்றப்பட்ட அவரின் மறைவு நாடு முழுமைக்குமே பேரிழப்பு என்றும் குறிப்பிட்டார்.

### செல்லச்சாமி

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் திரு. எம். செல்லச்சாமி பேசுகையில் கூறியதாவது:

"இந்தநாட்டின் தமிழ்பேசும் மக்கள் அனைவரையும் மொழி அடிப்படையில் ஒற்றுமைப் படுத்திய தந்தை செல்வா தமிழினத்தின் ஏகத் தலைவராவார். மகாத்மா காந்தி என்வேறு பிறராலும் மதிக்கப்பட் கட்டிய ஒற்றுமைக்கோட்டையை உடையவிடமாட்டோம்; உரிமைபெற்றே தீருவோம்.

# காந்திஜி, ஜின்னு வரிசையில்செல்வா

## — டாக்டர் கலீல்

முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் கலீல் பேசுகையில், புத்தளத்தில் ஆறு முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சமயம் முஸ்லீம் தலைவர்களே மௌனமாக இருந்தபோது! இந்த அநீதி பற்றி முதல்முதல் குரல் கொடுத்த திரு. செல்வநாயகத்தை முஸ்லிம் மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள். அவர் எவரையுமே வெறுத்தது கிடையாது. காந்திஜி, ஜின்னு போன்ற மகான் அவர். அவர் ஏற்படுத்திய ஒற்றுமையைக் குலையவிடாது அவரின் லட்சியப்பாதையில் செல்வதே அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும் என்றர்.

# செல்வா அணியில்உரிமைக்கு போராட நான் தயார்

## வி. பொன்னம்பலம்

கம்யூனிஸ்ட் கட்சி வடபிரதேச அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில், இங்குள்ள அரசாங்க, எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் வெறும் அஞ்சலிப் பேச்சுடன் மட்டும் நின்றுவிடாது தமிழ்மக்களின் பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகளைஉடன் மேற்கொண்டு அவர்களின் உரிமைகளை வழங்குவதே பெரியாருக்குச் செய்கின்ற உண்மையான அஞ்சலியாகும்என்று சொன்னர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

17 வயதிலிருந்து அரசியலில் பலம் தமது அணியில் போராட வந்தமைக்கு அவருக்கு வரவேற்புக்கூறுவதாகவும் தனியாக ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதன்மூலமே அவர் எங்கள் லட்சியத்தில் உழைக்கமுடியும் என்றும் கூறினர்.

திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"செல்வா மறைந்தபோது அவரின் லட்சியத்தை நிறைவேற்ற இங்குமாத்திரமல்ல எங்கெல்லாம் தமிழர் வாழ்கின்றர்களோ அங்கெல்லாம் சங்கல்பம் எடுக்கப்பட்டது.

"அவர் என்றுமே காணுத ஒற்றுமையை தமிழினத்தின்



### சமாதான நீதவான்

இளவாலையைச் சேர்ந்த திரு. நீக்குலாப்பிள்ளை பிலிப் இராசநாயகம் யாழ் மாவட்ட நீதிபரிபாலன எல்லைக்குப் புதிய சமாதான நீதவானுக நியமனம் பெற்று நேற்று மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் இளவாலை ப. நோ. கூ. சங்க முகாமையாளரும், பண்டத்தரிப்பு உள்ளூராட்சிமன்ற உபதலைவரும் முன்னைநாள் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தின் இயக்குநர்சபை உறுப்பினரும் காங்கேசன்துறை அபிவிருத்திச்சபை உபதலைவருமாவார்.

### திறந்தவெளி சிறைச்சாலை பார்வையாளர்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கோப்பாய் திறந்தவெளி சிறைச்சாலையில் நடப்பு வருட பார்வையாளராக கடமையாற்ற பின்வருவோர் நீதி அமைச்சினல் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஓராண்டு காலப் பகுதிக்கு கடமையாற்றுவார்கள்.

திரு. என். ரி. என். சோமநாதர் (உரும்பிராய்) திரு. க. குமாரசாமி (கோப்பாய்) திரு. எஸ். வி. சுப்பிரமணியம் (கோப்பாய்) திரு. இ. இராமரத்தினம் (கோப்பாய்)

மேற்படி பார்வையாளர்கள் குழுக்கூட்டம் அண்மையில் சிறைச்சாலை சுப்பிரின்டென்ட் திரு. எஸ். சங்கராசா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. என். ரி. என். சோமநாதர் மேற்படி குழுவின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்

( 7-ம் பக்கம் பார்க்க)

இதயம் கனியாகும்
111 வது வெற்றித் தினம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலுஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

RIO (Jaffna) Daily 10-30, 4-45 7-15 & 9.45
CARRY ON DICK
எல்லா நோய்களுக்கும் சிரிப்பு ஒரு அருமருந்து என்பர். சிரிப்பதற்கு வேண்டிய எல்லா அம்சங்களும் நிறைந்த படம். குடும்பத்துடன் பார்த்துச் சிரித்து மெய்மறந்து அனுபவியுங்கள்.

ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)
(ஜனத்திரள் அலைமோதுவதால் காட்சி நேரம் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகின்றோம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி ○ தேவிகா ○ நாகேஷ்
தினசரி 4 காட்சிகள் நடித்த
அன்னை இல்லம்

REGAL (JAFFNA) Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
2ND CROWDED WEEK
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

வெலிங்டன் (யாழ். நகர்)
முத்துராமன் ○ சுஜாதா
நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ (யாழ். நகர்) போன்: 7693
விஜயகுமார் — லதா
நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

# தலைவிதியை நிர்ணயிக்க—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு ஒரு கட்டத்தில் 'தமிழுக்கு தேசிய மொழி அந்தஸ்தைத்தந்தால் ஏற்படும் நட்டமென்ன-என்ன நட்டத்தை நீங்கள் அடைவீர்கள்' எனக் கேட்டேன். அரசியல் சாசனத் திருத்தமின்றிச் சாதாரண சட்டங்கள் மூலமே எம்மைத் திருப்திசெய்யவே அவர்கள் விரும்பினார்கள் இதனை அடுத்துத்தான் மாவட்ட ரீதியிலான சுயாட்சியையாவது வென்றெடுக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்தேன்.

## கூட்டணியுடன் எனது உறவு

''தனி நாடு கேட்கும் கூட்டணிக்கும் பிரதேச சுயாட்சி கேட்கும் பொன்னம்பலத்திற்கும் என்ன உறவு என்று பலர் அங்கலாய்க்கிறார்கள்.

''ஒரு இனம்-தமிழ் இனம் வாழும் பிரதேசம் இங்கு உண்டு. அந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கு என்றும் தம் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் உரிமை உண்டு. விரும்பினால் பிரிந்து சென்று தனி நாடு அமைக்கும் கூர்மையோடு கூடிய சுயாட்சி அவர்களுக்கு வேண்டுமென்பதே எனது நிலைப்பாடாகும். விவாகரத்து இருக்கிறது என்பதற்காக எல்லோரும் விவாகரத்தைப் பெற முடியாது. கணவனோ; மனைவியோ மோசமாக - திருத்த இயலாத முறையில் நடந்தால் விவாகரத்தைப் பெறுமலும் இருக்க முடியாது. அதுபோலவே பிரிந்து செல்வது தவிர்க்க முடியாத நிலை ஏற்படுமானால் தனி நாடாகப் பிரிந்துகொள்ளும் பூரண உரிமையுள்ள சுயாட்சியைத்தான் நான் நிலைப்பாடாகக் கொண்டிருக்கின்றேன்.

''பெரியார் செல்வநாயகம் தமிழ் ஈழம் என்று சொல்லிய சித்தாந்தத்துள் இதுவும் அடங்கியிருக்கிற காரணத்தால் அந்த இலட்சியத்துக்காக நானும் இணைந்து நின்று உழைக்க முன்வந்தேன். சர்வதேசியரீதியில் நான் சார்ந்திருக்கும் இயக்கத்தின் மூலம் இந்த இலட்சியத்தை அடைய என்றும் பாடுபடுவேன்.''

இவ்வாறு திரு. வ. பொன்னம்பலம் தமது நிலையை விளக்கினார்.

## செல்வாசாதனை பற்றி அமிர்

திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது: ''தந்தை செல்வா எதைச் சாதித்தார் என்று சற்று சிந்திப்பதுநல்லது. தனிச்சிங்களச்சட்டத்தை நிறைவேற்றியபின் லண்டன் சென்ற திரு. எஸ். டபிள் யூ. ஆர். டி பண்டாரநாயக்கா அங்கு மொழிப்பிரச்னை தீர்ந்துவிட்டது, அதை மாற்ற முடியாது என்று சொன்னார். ஆனால் 57-ல் தந்தையின் தலைமையில் நிகழவிருந்த எதிர்ப்புப் போராட்டங்களை அறிந்து அதைதவிர்ப்பதற்காகத் தந்தையுடன் ஒப்பந்தம் செய்தார். அடுத்த ஆண்டு அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார். இருந்தும் மொழிப்பிரச்சனை தீரவில்லை. 57-ம் ஆண்டில் இருந்து 20 வருடங்களின் பின் 77-ல் திருமதி-பண்டாரநாயக்கா எம்மையழைத்து மொழிவிஷயத்தில் தவறு உண்டு இது விடயமாக அரசியல் சட்டத்தை திருத்தவும் அவசியமான புதிய விதிகளைச் சேர்க்கவும் ஆயத்தமாயுள்ளேன் என்று கூறினார்.

தீர்க்கப்பட்ட பிரச்னை என்று சொல்லிய மொழிப்பிரச்னையை 20 வருடங்களாக தீராத பிரச்னையாக தீர்க்கப்படாதபிரச்னையாகஇருந்துவருவலித தந்தைசெல்வா சாதித்த சாதனை. இதுதான் தந்தையின் அறப்போரின் சக்தி என்றும் சொல்லலாம். 76ல் தமிழரை தமிழர் விடுதலைக்கூட்டணியில் ஒரே தலைமையில் இணைத்து சுதந்திர மக்களாக வாழவேண்டும் என்ற உணர்வை அவர் விட்டுச் சென்றுள்ளார். இவ்வேளையில் எல்லோருக்கும் ஏற்ற ஒரு தலைவர் மறைந்த காரணத்தால் தத்தளிப்பும் பெரிய சிக்கல் நிலையும் உருவாகியுள்ளது. அன்னாரின் இலட்சியக் கனவை நனவாக்க உழைத்துஅழியாத இலட்சியச் சின்னமாக தமிழ் ஈழத்தை அமைப்பது ஒன்றே நாம் செய்யக்கூடிய ஒரே ஒரு நன்றிக்கடனாகும்.

## ''நூல்பற்றி'' அமிர்

மிகக்குறுகிய காலத்தில் துரிதமாக 'தந்தை செல்வா' என்னும் இந்நூலை மா. குலேந்திரன் எழுதியுள்ளார், தந்தையின் வாழ்க்கைக் குறிப்புக்கள், நோய்வாய்ப்பட்ட சூழ்நிலைகள் இறுதிஊர்வல நிகழ்ச்சிகள் உட்பட பலவற்றையும் அழகாகச் சித்தரித்துள்ளார். என்று அமிர் பாராட்டுத் தெரிவித்தார்.

'தந்தை செல்வா' என்னும் இந்நூலை திரு. அமிர்தலிங்கம் வெளியிட்டு வைத்தார். முதல் பிரதிகளை எஸ்டிஆர் பிலிம்ஸ் அதிபர் திரு. எஸ். இராசரத்தினமும், நாரந்தனை கிராமசபைத் தலைவர் திரு. சண்முகலிங்கமும் வாங்கினார்கள். (சி—அ)

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எம்.ஜி.ஆர்- சரோஜாதேவி
பணக்காரக் குடும்பம்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன் மஞ்சுளா
புதுவெள்ளம்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
கனிமுத்து பாப்பா

# ஞானம்ஸ் மீண்டும் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்வாய் வடமராட்சி தெற்கு மேற்கு காரியாதிகாரி பிரிவினால் நடாத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் இம்முறையும் வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தைப்பெற்றுக் கொண்டது. ஆண்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை திரு. சி. சிதம்பரநாதனும், பெண்களுக்கான வெற்றிக்கிண்ணத்தை விமலாதேவியும் பெற்றுக் கொண்டனர்.

மூன்று வருடங்களாக இக்கழகம் தொடர்ந்து வெற்றி பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (கா-இ)

# இவர்கள் பற்றி இளைஞர் பேரவை ஆராயும்

யாழ்ப்பாணம், செவ். தலைமைப்பீடத்தின் கட்டுப்பாட்டுக்கு அமையாது செயல்படும் தமிழ் இளைஞர் பேரவையினர்பற்றி ஆராயுமுகமாகத் தமிழ் இளைஞர் பேரவை நடவடிக்கைக்குழு இம்மாதம் 29 ம் திகதி கூடுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்தில் இக் கூட்டம் நடைபெறும். இதற்கான அறிவித்தல்கள் சகல தொகுதிப் பேரவைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தொகுதியிலுமிருந்து இக்கூட்டத்தில் 20 பேர் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தேர்தலில் போட்டியிடும் இளைஞர் பேரவை உறுப்பினர் பற்றியும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும். [கெ-அ]

# இவர்களுக்கு சம்பளஉயர்வு கிடைக்கும்

கொழும்பு, திங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கிவரும் சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுவரை மாதம் 75 ரூபா பெற்றுவந்த இந்த ஆசிரியர்கள் இனிமேல் 150ரூபா சம்பளம் பெறுவர்.

இவ்வருடம்ஜனவரியிலிருந்து இச்சம்பளத்திட்டம் அமுலுக்கு வருகிறது. (இ)

## இன்று...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அ. அசுந்தநி, கொ. இ. க. மேற்பிரிவு; ஆண்கள்— சொ. தயாபரன், வைத்தீஸ்வர வித்தியாலயம். ந சுதாகர், வைத்தீஸ்வர வித்தியாலயம். கு சிவபாலன், வைத்தீஸ்வர வித்தியாலயம்.

பெண்கள்: வை சுகந்தி, கொ இ க. வி கீதாஞ்சலி, வேம்படி மகளிர் கல்லூரி, வி இராஜேஸ்வரி, கொ இ க.

நடுப்பிரிவு: பெண்— சதாக்ஷயாயினி, இந்து மகளிர் கல்லூரி. சி சற்குணேஸ்வரி, இந்து மகளிர் கல்லூரி. பொ சுகந்தி, வைத்தீஸ்வரா வித்தியாலயம்

அதிமேற்பிரிவு: பெண்— கோ வாசுகி, வைத்தீஸ்வர வித்தியாலயம்

## சமசமாஜ

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் நான் தொடர்ந்தும் கட்சியில் அங்கம் வகிப்பதில் அர்த்தமில்லை. எனவே ராஜினமா செய்கின்றேன்.

நான் தொடர்ந்து அரசியலில் இயங்கவிருக்கின்றேன். தமிழ் பேசும் மக்களுக்கு, பிரதேச சுயாட்சி, தமிழ் உத்தியோகமொழி கலை,கலாச்சாரத்தைப்பேணும் அரசியல் கட்சிகளுக்கு முழுஆதரவையும் வழங்க முடிவுசெய்துள்ளேன். (நெல். நி.)

## திறந்தவெளி...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

டார். இவர் முன்னாள் சுகாதாரப்பகுதி தேசிய பாலுணவுத் திட்ட மாவட்ட மேற்பார்வையாளராக கடமை புரிந்து ஓய்வு பெற்ற ஊழியராகும். (இ)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்) விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)

"திருவருள்" புரியும் பக்திரசமான 3-வது வாரம்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள் ஏ.வி.எம்.ராஜன் கிருபானந்தவாரியார்
நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஈழநாடு
The EELANADU

யாழ்ப்பாணம், செவ். நீண்டகாலமாக வடமாகாணத்தில் சமசமாஜக்கட்சியின் முக்கிய பதவிவகித்த திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் அக்கட்சியில் இருந்துதான் விலகுவதாக, ராஜினமா கடிதத்தை தலைமைப்பீடத்துக்கு அனுப்பியுள்ளார்.

அவர் தமது விலகலுக்கான காரணத்தை விளக்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

## சமசமாஜ கட்சியிலிருந்து தர்மரத்தினம் ராஜினமா!

சமசமாஜக்கட்சி ஆரம்பத்தில் சமஅந்தஸ்து கொள்கையுடையதாகஇருந்தும் பின்னர் அதை 60-ம்ஆண்டில் மாற்றிக் கொண்டது. பின்னர் படிப்படியாக தமிழர்களின் நலனில் அக்கறையில்லாமல் தமிழினத்தின் உரிமைகளை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை.

(7-ம் பக்கம் பார்க்க)

# தி. மு. க. - ஜனதா இரகசிய உடன்பாடு இல்லை

# எம். ஜி. ஆர். கட்சியின் குற்றச்சாட்டுக்கு

## கருணாநிதி மறுப்பு



சென்னை, மே 23

'திராவிட முன்னேற்றக் கழகம் ஜனதா கட்சியுடன் இரகசியமாகத் தேர்தல் உடன்பாடு செய்து கொண்டுள்ளதாக கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை' என்று தி மு க தலைவர் கலைஞர் மு. கருணாநிதி இன்று சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

ஜனதா கட்சிக்கும் தி மு கவுக்கும் இடையே இரகசியத் தேர்தல் உடன்பாடு இருப்பதாக அ இ அ தி மு க தலைவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்களே. இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?' என்று நிருபர்கள் கேட்ட கேள்விக்கு கலைஞர் பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

'ஆதாரமற்றக் குற்றச்சாட்டு இது' என்றார் அவர்,

### பத்திரிகையாளர் கடமைகுறித்து கலைஞர்

சென்னையில் 'தினகரன்' பத்திரிகை விழாவில் கலைஞர் பேசுகையில் பத்திரிகையாளரின் கடமை குறித்து வலியுறுத்தினார்.

'சட்டசபையில் சபாநாயகர் சகல கட்சியினரும் பேசுவதற்கு அனுமதி வழங்குவது போல் பத்திரிகைகளும் சகல கட்சிகளினது கருத்துக்களுக்கும் இடமளிக்க வேண்டும்' என்று கலைஞர் சொன்னார்.

இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில், 'நாடு ஒரு குழந்தையைப் போன்றது, குழந்தைக்கு ஆபத்து வருவதை தாய் தடுப்பது போல் நாட்டுக்கு வரும் ஆபத்தை பத்திரிகைகள் தான் தடுக்க வேண்டும்' என்றார்,

இது இவ்வாறு இருக்க, தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் 234 தொகுதிகளுக்கும் மொத்தம் 1390 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர், 2658 வேட்பாளர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தனர்,

இதில் 1268 மனுக்கள் வாபஸ் பெறப்பட்டன அல்லது தள்ளுபடி செய்யப்பட்டன.

### நேரடிப் போட்டியில்லை

கடந்த சட்டசபைத் தேர்தலில் 75 தொகுதிகளில் நேரடிப் போட்டி நிலவியது.

இத்தடவை தேர்தலில் எத்தொகுதியிலும் நேரடிப் போட்டியில்லை,

இதேவேளை, காங்கிரஸ் மாதர் பேரவை பிரமுகர் பொன்னம்மாள் பழனி தொகுதியில் இருந்து தமது வேட்பு மனுவை இன்று வாபஸ் பெற்றார், தென்னாற்காடு மாவட்டத்தில் பண்ருட்டித் தொகுதியில் ஜனதா வேட்பாளர் கோபாலகிருஷ்ணனுக்கு ஆதரவளிக்கும் வகையில் தி மு க வேட்பாளர் தம் வேட்பு மனுவை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

வெற்றி வாய்ப்பைக் கவனத்தில் கொண்டு இவ்வாபஸ் இடம் பெற்றதாக தி மு க தலைவர் கலைஞர் கருணாநிதி கூறினார்.

இத்தொகுதியில் மாஜி தி மு க அமைச்சர் திரு ராமச்சந்திரன் அ இ அ தி மு க வேட்பாளராகப் போட்டியிடுகிறார். (உ)

## புலோலி கூ.சங்கஊழியர் வேலைக்குத் திரும்பினர்

நெல்லியடி, திங்கள். புலோலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் வேலைநிறுத்தம் சமரசமுறையில் தீர்த்துவைக்கப்பட்டது.

இச்சங்கத்தின் வராத்துப்பளைக் கிளையைச் சேர்ந்த முகாமையாளரையும், விற்பனையாளரையும், இச்சங்கத்தின் இயக்குநர்சபை உறுப்பினர் ஒருவர் அடாத்துப் பண்ணியதாகவும் விற்பனையாளரைத் தாக்கியதாகவும் கூறி இவ்வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இவ்வேலைநிறுத்தத்தை இச்சங்கத்தின் உபதலைவர் திரு வி. கணேசமூர்த்தி தலைமையிலான இயக்குநர்சபை உறுப்பினர்கள் ஊழியர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது, குறிப்பிட்ட இளைச்சங்க முகாமையாளரையும் விற்பனையாளரையும் இடமாற்றம் செய்யும்படி கோரிக்கை விடப்பட்டது.

இக்கோரிக்கையையியக்நுர் சபை ஏற்றுக்கொண்டதையடுத்து இவ்வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. இவ்வேலை நிறுத்தத்தின்போது அவ்வாரத்திற்குரிய பாவனைப் பொருட்களைப்பெற முடியாத பாவனையாளர்களின் நலன் கருதி, இச்சங்கத்தின் கிளைச் சங்கங்கள் யாவும் திறக்கப்பட்டு சேவையாற்றப்பட்டது. (அ)

### டெவன்தோட்டசம்பவம்

# பாரபட்சமற்ற நீதி விசாரணை நடத்துக

யாழ்ப்பாணம் செவ், பத்தனை டெவன் துதோட்டத்தில் அண்மையில் பொலிசாரின் துப்பாக்கி பிரயோகத்தில் பலியான இளைஞன், சிவனு இலட்சுமணது மரணம் குறித்து உடன் பாரபட்சமற்ற விசாரணையை ஆரம்பிக்குமாறு உள்நாட்டு, வெளிநாட்டு பாதுகாப்பு அமைச்சுக்கு புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்க செயலாளர் திரு. சி. இலிங்க வேலாயுதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இனஅடிப்படையில் இல்லாமல் தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இவ்விசாரணையை நடத்த வற்புறுத்த வேண்டுமென்றும், முன்பு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் இளைஞன் பலியானது பற்றித் தொழிற்சங்கங்கள் ஏகோபித்து வேண்டியதைத்தொடர்ந்தே விசாரணை மேற்கொள்ளப் பட்டதாகவும் தொழிற்சங்கங்களுக்கு விடுத்தவேண்டுகோளில் அவர் குறிப்பிட்டார்.

(கெ-அ)

### இன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம், செவ். அகில இலங்கை சேக்கிழார் மன்றம் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் சேக்கிழார் விழா 2ம் நாளான இன்று பரிசுகள் வழங்கப்படும். பரிசு வழங்குவோர் விபரம் வருமாறு:-

கீழ்ப்பிரிவு: ஆண்கள்—எஸ். இராஜசூரியர், கொ. இ. கல்லூரி, த. கணேசமூர்த்தி, வைத்தீஸ்வர வித்தியாலயம்.

பெண்கள்- சி. உமாதேவி, வைத்தீஸ்வராக்கல்லூரி. கே. சுமதி, கொ. இ. கல்லூரி.

(7ம் பக்கம் பார்க்க)

### பணயம்

லண்டன், மே 23

ஒல்லாந்தில் மலாக்கா வாசிகள் ரயில் ஒன்றையும் பாடசாலைச் சிறுவர்களையும் பணயம் வைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தாம் பணயம் வைப்பதற்குரிய காரணத்தை மலாக்கா வாசிகள் அறிவிக்காத போதிலும் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவிருக்கும் ஒல்லாந்து பொது தேர்தலுக்கு ஒரு அச்சுறுத்தலாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

மேற்படி சிறுவர்களில் 15 பேர் விடுவிக்கப்பட்டுள்ளதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

மலாக்கா வாசிகளின் இந் நடவடிக்கையை அடுத்து ஒல்லாந்து பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் தமது தேர்தல் பிரசாரங்களை நிறுத்தி வைத்துள்ளனர். (உ)

### வடபகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகஸ்தர் திரு. ஏ. ஜி. இராஜசூரியர், நேற்றுமட்டும், தமது நிலையத்திலிருந்து 700 கார்களுக்கு பெற்றோல் வழங்கியதாக கூறினார்.

காருக்கு 1 கலன் வீதம், தாம் நேரில் நின்று இந்த ஏற்பாட்டைச் செய்ததாக அவர் கூறினார்.

ஸ்ரான்லி வீதியிலுள்ள நிலையத்திலிருந்தும், ஒருவருக்கு 1 கலன் வீதம் மண்ணெணை வழங்கியதாகவும் திரு. இராஜசூரியர் தெரிவித்தார்.

தமக்கு, டிப்போ தொடர்ந்து எரிபொருள் வழங்க மறுத்து விட்டதாகவும், இதனால் தொடர்ந்து மக்கள் கஷ்டத்தை போக்க முடியாமல் போய்விட்டதாகவும் கூறினார்.

கிளிநொச்சி பகுதியில், எரிபொருள் தட்டுப்பாட்டினால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர், பரந்தன், கிளிநொச்சியிலுள்ள எரிபொருள் நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். யோகநாதன், பெர்மிட்மூலம் ஒருவருக்கு 1 கலன் வீதம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார். (க)

பிந்திய செய்தி

### இன்று நிலைமை சீராகும்?

கொழும்பு, திங்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் 'சட்டப்படி வேலைசெய்யும் இயக்கத்தைக் கைவிட்டுள்ளனர்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். கே. கே. சூரியாராய்ச்சியுடனும், கூட்டுத்தாபன உயர்அதிகாரிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து இவ்வியக்கம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து நாளை நிலைமை வழமைக்குத் திரும்பிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

### காங்கேசன் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோதனைகள், வேதனைகள், தோல்விகள் வந்தாலும் கலங்காதவர் அவர். எமக்கு வழிகாட்டியாக விளங்கிய அவர் சுதந்திரம் பெறவேண்டுமானால் ஒற்றுமை அவசியமென வலியுறுத்தினர். அந்த ஒற்றுமைக்காக அரும்பாடுபட்டார். அவர் கட்டிக்காத்த ஒற்றுமையைப்பேணுவதற்காகவே நான் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிடவேண்டியேற்பட்டது. தொடர்ந்து நமது ஒற்றுமையைக் கட்டிக் காப்போம்'' என்றார்.

### வி, பி, உரை

கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில்:

தமிழர் கூட்டணியினரின் கொள்கை நீதி, நியாயத்தின் அடிப்படையிலான கொள்கையாகும். இதை இந்தநாட்டின் இடதுசாரிகள் ஏற்றிருந்தால் இன்று நிலைமை வேறுவிதமாக மாறியிருக்கும். ஆனால் தனிச் சிங்களச் சட்டத்தை முதலில் எதிர்த்து பின்னர் சிறிது சிறிதாக ஏற்றுக்கொண்ட அவர்கள் இதை எப்படி ஏற்கமுடியும்? எனது கட்சிக்குள்ளும் தமிழர் கூட்டணியினரின் கொள்கைகள் நியாயபூர்வமானவை என நான் வாதாடி வந்ததன் பயனாகவே இன்று அவர்களுடன் நாம் இணைந்து செயல்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது''என்றார். வண. பிதா தனிநாயகம் அடிகள், மாவை சேனாதிராசா, சட்டத்தரணிகள் மு. திருநாவுக்கரசு, ஜீவேஸ்வரா முதலானோரும் பேசினர். (உ)

### தமிழக அறிஞர் வந்தார்

யாழ்ப்பாணம், செவ். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்விரிவுரையாளர் திரு. சி. வைத்தியலிங்கம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சேக்கிழார்விழாவில் கலந்துகொள்ளும்பொருட்டு நேற்றிரவு விமானமூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார், (உ)

## தேவை

அச்சுக்கோர்ப்பாளர்கள் (COMPOSITORS)

உடன் தேவை. தராதரத்தைக் குறிப்பிட்டு நற்சான்றுப் பத்திரப்பிரதிகளுடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 6261,
6261 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna; Telegram: Eelanaadu Telephone 389, Registered as a Newspaper in Sri Lanka.